திமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**வாழைநாரில் கைவினைப்பொருள்கள் தயாரிக்க மகளிர் சுய உதவிக் குழுவினர் முயற்சிக்க வேண்டும்**

First Published : 03 Feb 2010 09:10:24 AM IST

கரூர், பிப்.2: வாழை நாரை மூலப்பொருளாகக் கொண்டு கைவினைப் பொருள்களை தயாரிக்க மகளிர் சுயஉதவிக் குழுவினர் முயற்சிக்க வேண்டுமென ஆட்சியர் யோசனை தெரிவித்துள்ளார்.

கரூர் ஊராட்சி ஒன்றியம் நன்செய்புகழூர் ஊராட்சியில் ஊராட்சிப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு வழங்கும் விழா, மணிமகேலை விருதுபெற்ற அன்னை சுய உதவிக்குழுவுக்கு பாராட்டு விழா ஆகியவை அண்மையில் நடைபெற்றன.

நிகழ்ச்சிக்கு ஆட்சியர் ஜெ. உமாமகேஸ்வரி தலைமை வகித்து பரிசுகளை வழங்கி பேசியது:

பெண்களின் பின்தங்கிய நிலை தற்போது மாறி விட்டது. மகளிர் சுய உதவிக்குழுக்கள் பெண்களை முன்னேற்றத்துக்கு அழைத்துச் செல்கிறது. பெண்கள் பொருளாதாரத்தில் உயர்ந்தால்தான் வீடு, நாடு, சமுதாயம் முன்னேற்றமடையும்.

மகளிர் சுய உதவிக்குழுவினர் வாழைநாரை மூலப்பொருளாக கொண்டு பல்வேறு பொருள்களை வியாபார நோக்கத்தோடு தயாரித்து விற்பனை செய்யலாம். வாழை நாரைக்கொண்டு கை பை, ஜோல்னா பை, சிறு பைகள் அலங்கார பொருள்கள் செய்யலாம். இதற்கான தேவைகள் அதிகமாக உள்ளன. இத்தொழில் செய்ய குறைந்த வட்டியில் கடன் வழங்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும். எனவே, மகளிர் சுய உதவிக்குழுவினர் வாழை நாரை மூலப்பொருளாக கொண்டு பல்வேறு பொருள்களை செய்ய முன்வர வேண்டும் என்றார்.

இந்நிகழ்ச்சியில், மகளிர்திட்ட அலுவலர் ராஜலட்சுமி, கரூர் ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் வளர்மதி சிதம்பரம், நகர்மன்ற கோகிலா மணி, ஊராட்சி மன்றத் தலைவர் மல்லிகா கந்தசாமி, வட்டார வளர்ச்சி அலுவலர் கோபிநாத் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

முன்னதாக, வட்டார வளர்ச்சி அலுவலர் ஆர். உலகநாதன் வரவேற்றார். துணை வட்டார வளர்ச்சி அலுவலர் உமாசங்கர் நன்றி கூறினார்.

**இயற்கை வேளாண்மை புரிவோர் அங்ககச் சான்றிதழ் பெற வலியுறுத்தல்**

First Published : 03 Feb 2010 04:12:36 AM IST
Last Updated : 03 Feb 2010 08:36:16 AM IST

திருவண்ணாமலை, பிப். 2: இயற்கை வேளாண்மை புரிவோர் கண்டிப்பாக அங்ககச் சானறிதழ் பெற வேண்டும் என கோவை வேளாண் பல்கலைக்கழக அங்ககச் சான்றளிப்பு துறை அலுவலர் பி.ரபியுல்லா கூறினார்.

திருவண்ணாமலை மாவட்டக் கூட்டுறவு ஒன்றியம், கிரிப்கோ நிறுவனம் சார்பில் செங்கம் அடுத்த செ.நாச்சிப்பட்டு ஸ்ரீ சக்தி பாலிடெக்னிக்கில் இயற்கை வேளாண்மை கருத்தரங்கம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இதில், ரபியுல்லா பேசியது:

விவசாயிகள் அதிகளவில் பூச்சிகொல்லி மருந்துகளை பயன்படுத்தியதால் நிலங்கள் அனைத்து விஷமாகி விட்டன.

அதிக மகசூல் கிடைக்கும் என இத்தனை நாள்களாக ரசாயன உரங்களைப் பயன்படுத்தி வந்தோம். இதனால் மண் தனது தன்மையை இழந்து விட்டது. மண் வளமாக இருந்தால்தான் மகசூல் அதிகரிக்கும். கரிமச் சத்து குறைவாக இருப்பதால் நிலங்கள் பாதிப்படைகின்றன. இயற்கை விவசாயம் செய்தால் கூடுதல் மகசூல் கிடைக்கும். நிலத்தின் தன்மையும் பாதுகாகப்படும். மண்புழு உரம், நுண்ணுயிர் இடுபொருள்கள், உரங்கள், பூசணக்கொல்லிகள், மூலிகை பூச்சி விரட்டிகள், இயற்கை எரு, போன்றவற்றை பயன்படுத்த வேண்டும்.

இயற்கை விவசாயம் செய்வோர் கண்டிப்பாக அங்ககச் சான்றிதழ் பெற வேண்டும். தனிநபராகவோ, கூட்டாகவோ, அல்லது ஒரு நிறுவனமாகவோ பதிவு செய்யலாம்.

விண்ணப்பப் படிவம், பண்ணையின் பொது விவரம், பண்ணை வரைபடம், மண் மறறும் பாசனநீர் பரிசோதனை விவரம், ஆண்டு பயிர்திட்டம், துறையுடன் ஒப்பந்தம், ஆகியவற்றை மூன்று நகல்களில் அளிக்க வேண்டும். மேலும் விவரங்களுக்கு அங்கக சான்றளிப்பு இயக்குநர், தடாகம் சாலை, ஜிசிடி அஞ்சல், கோவை-13, தொலைபேசி-0422-2435080-ஐ அணுகலாம் என்றார் ரபியுல்லா.

மண்டல இணைப்பதிவாளர் ச.சுப்பிரமணியன் தலைமை தாங்கினார். கூட்டுறவு ஒன்றிய தனி அலுவலர் ஆறுமுகம் வரவேற்றார்.

பாலிடெக்னிக் தாளாளர் எஸ்.வெங்கடாசலபதி, வேளாண் உதவி இயக்குநர்கள் சிவக்குமார், வடமலை, நபார்டு உதவிப் பொது மேலாளர் நாராயணன், விதைச் சான்று அலுவலர் சுப்பிரமணியன், கள அலுவலர் தயாளன் உள்ளிட்டோர் பேசினர்.

### பட்டு வளர்ச்சி விழிப்புணர்வு முகாம்

First Published : 03 Feb 2010 04:13:20 AM IST

கிருஷ்ணகிரி, பிப்.2: கிருஷ்ணகிரி மாவட்டம், சாமாண்டப்பட்டி கிராமத்தில் பட்டுவளர்ச்சி குறித்த விழிப்புணர்வு முகாம் திங்கள்கிழமை நடைபெற்றது.

பட்டுவளர்ச்சி தொகுப்பு மேம்பாட்டு திட்டத்தின் கீழ் நடைபெற்ற விழிப்புணர்வு முகாமில் கிருஷ்ணகிரி மாவட்ட பட்டு வளர்ச்சித்துறை உதவி இயக்குநர் கோலப்பா பிள்ளை, ஒசூர் மத்திய பட்டு வாரிய விஞ்ஞானி சமுத்திரவேலு, உதவி ஆய்வாளர் அ.மதிவாணன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

முகாமில் அரசின் நலத்திட்ட உதவிகள், பெண் விவ

சாயிகளுக்கான காப்பீடு திட்டங்கள், தோட்டங்களைப் பராமரித்தல், பட்டு முட்டையின் தரம், கருப்பு அட்டையின் பயன்பாடு, இளம்புழு வளர்ப்பு உள்ளிட்டவை குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

### தொழில் நுட்பம் சார்ந்த விவசாயமே இன்றைய தேவை

First Published : 03 Feb 2010 01:30:50 AM IST
Last Updated : 03 Feb 2010 08:52:53 AM IST

குலசேகரம், பிப். 2: நவீன தொழில் நுட்பம் சார்ந்த விவசாயமே இன்றைய தேவை என்று இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழக பெங்களூர் மண்டல திட்ட இயக்குநர் சா. பிரபு குமார் செவ்வாய்க்கிழமை தெரிவித்தார்.

குலசேகரத்தில்  வேளாண் அறிவியல் நிலையம் சார்பில் நடைபெற்ற வேளாண் தொழில் நுட்ப வார தொடக்க விழா நிகழ்ச்சியில் அவர் மேலும் பேசியதாவது.

விவசாயத்தில் காலத்திற்கேற்ற மாற்றம் தேவை. பசுமைப் புரட்சி காலத்தில் உற்பத்தியை மட்டுமே கணக்கில் கொண்டு விவசாயம் செய்யப்பட்டது. இதனால், விவசாயிகளுக்கு அதிக லாபம் கிடைக்கவில்லை  அது நாம் செய்த தவறு.

இதன்காரணமாக விவசாயிகள் தங்களது வாரிசுகளை விவசாயத்தில் ஈடுபடுத்தவில்லை. 1990- க்கு பிறகு உலக அளவிலும், இந்திய அளவில் விவசாயத்தில் பெரும் மாற்றம் ஏற்பட்டு வருகிறது. இந்த மாற்றத்திற்கு விவசாயிகள் அனைவரும் தயாராக வேண்டும்.  தொழில் நுட்பம் சார்ந்த விவசாயமே இன்றைய தேவை.

புதிய தலைமுறையினரை விவசாயத்தில் ஈடுபடுத்த வேண்டும். மாறிவரும் உலகச் சூழலில் விவசாயம், விவசாயிகளுக்கு லாபகரமானதாக அமையும்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் பல பயிர்கள் சாகுபடி செய்யும் வாய்ப்புகள் உள்ளது.

கேரள மாநிலம் அருகில் உள்ளதால் நல்ல சந்தை வாய்ப்புகள் உள்ளது. ஆண்டுக்கு 1500 செ.மீ. மழை கிடைக்கும் இந்த மாவட்டத்தில் அதிக கூலி, மற்றும் வேலையாள்கள் குறைவு காரணமாக விவசாயத்தில் இயந்திரமயமாதலை பயன்படுத்த வேண்டும் என்றார் அவர்.

நிகழ்ச்சியில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக விரிவாக்க கல்வி இயக்குநர் பா. கலைச் செல்வன் தலைமை வகித்து பேசியதாவது:

விவசாயிகளுக்கு தொழில் நுட்ப அறிவு, தொழில் சேவை, தொழில் நுட்பம் தொடர்பான இடுபொருள்கள் ஆகியனச் சென்றடைய வேண்டும் என்ற அடிப்படையில் விவசாய வார விழா நடத்தப்படுகிறது.

மலர் சாகுபடி, நெல் ஆராய்ச்சி மற்றும் தோட்டக் கலைத் துறையினரின் புதிய கண்டுபிடிப்புகள் வேளாண்மை அறிவியல் மையம் மூலம் விவசாயிகளுக்குக் கொண்டு செல்லப்படுகிறது. இத் துறைகள் மற்றும் தொழில் நுட்பத் துறை சார்பில் 356 நெல் ரகங்களை வெளியிட்டுள்ளோம், 130 க்கும் மேற்பட்ட வேளாண் கருவிகளைத் தயாரித்துள்ளோம்.

குறைவான விவசாய நிலப்பரப்பைப் பயன்படுத்திக் கொண்டு, தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி லாபகரமாக உற்பத்தி செய்ய வேண்டும் என்றார்.

மாவட்ட வேளாண் இணை இயக்குநர் கணேசன், தோட்டக் கலை அலுவலர்  அசோக் மேக்ரின், ரப்பர் வாரிய துணை ஆணையர் முரளிதரன், முன்னோடி வங்கி மேலாளர் சந்திரசேகரன், திருப்பதிசாரம் நெல் ஆராய்ச்சி மைய பேராசிரியர் மற்றும் தலைவர் எ.பி.எம். கிருபாகரன், பேச்சிப்பாறை தோட்டக் கலை ஆராய்ச்சி மைய பேராசிரியர் மற்றும் தலைவர் ஐ. பிரேம் ஜோஸ்வா, தோவாளை மலர் ஆராய்ச்சி நிலைய இணைப் பேராசிரியர் மற்றும் தலைவர் ரா. சுவர்ணபிரியா ஆகியோர் பேசினர்.

முன்னதாக, பேச்சிப்பாறை வேளாண் அறிவியல் நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் க. இறைவன் வரவேற்றார். இணைப் பேராசிரியர் தி. தங்க செல்வபாய் நன்றி கூறினார்.

நிகழ்ச்சியில் திரளான விவசாயிகள் பங்கேற்றனர். அவர்களுக்கு கருத்துக் காட்சி, விவசாய தொழில் நுட்பக் கருவிகள் குறித்த விளக்கம் அளிக்கப்பட்டது.

### விவசாயிகள் குறைதீர் முகாம்

First Published : 03 Feb 2010 12:35:24 AM IST

செங்கல்பட்டு, பிப். 2: காஞ்சிபுரம் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் முகாம் இங்கு செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

÷மாவட்ட ஆட்சியர் சந்தோஷ் கே. மிஸ்ரா, ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) முத்துதாஸ், வேளாண் துறை இணை இயக்குநர் செல்லப் பிள்ளை, காட்டாங்குளத்தூர் வேளாண் பயிற்சி மைய உதவி இயக்குநர் சேகர், கோட்டாட்சியர் பழனி, செங்கல்பட்டு வட்டாட்சியர் வெங்கடேசன் மற்றும் அனைத்துத் துறை அதிகாரிகள், விவசாயிகள் பங்கேற்றனர்.

÷இம் மாவட்டத்தில் வேளாண் துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்ட வளர்ச்சி திட்டப் பணிகள் குறித்தும், செயல்படுத்தப்படும் சிறப்பு திட்டங்கள் குறித்தும் விவசாயிகளுக்கு விளக்கப்பட்டது.

விவசாயிகள் பேசுகையில், இம் மாவட்டத்தில் உள்ள 54 வட்டங்களில் ஒவ்வொரு வட்டத்திலும் பிர்கா வாரியா அப்பகுதிகளில் விவசாயிகளுக்கு பயன்படும் வகையில் விதை, விவசாய கருவிகள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களை மானிய விலையில் வழங்க வேண்டும் என்றனர். மேலும், மரபின பி.டி. கத்தரிக்காயை இந்தியாவில் அனுமதிக்கக் கூடாது என வலியுறுத்தினர்.

÷மானிய விலையில் 15 விவசாயிகளுக்கு மின் மோட்டார் இயந்திரம் வழங்கப்பட்டது. 2 விவசாயிகளுக்கு நெல் சாகுபடிக்கான நவீன இயந்திரம் மற்றும் மரக்கன்று, விதைகள் வழங்கப்பட்டன.

÷காஞ்சிபுரம், செங்கல்பட்டு, மதுராந்தகம், உத்தரமேரூர், பாலூர், திருக்கழுகுன்றம், சட்ராஸ், படாளம், சாலவாக்கம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து விவசாயிகள் திரளாகக் கலந்துகொண்டனர்.

### மாங்கனி உற்பத்தியைப் பெருக்க வேண்டியது அவசியம்

First Published : 02 Feb 2010 12:41:18 AM IST
Last Updated : 02 Feb 2010 10:33:46 AM IST

கோவை, பிப்.1: மாங்கனி உற்பத்தியைப் பெருக்க வேண்டியது அவசியம் என்று வேளாண் பல்கலைக்கழக பதிவாளர் ப.சுப்பையன் தெரிவித்தார்.
மாங்கனி உற்பத்தி, அறுவடை தொழில்நுட்பங்கள் மற்றும் விற்பனை குறித்து வேளாண் பல்கலை.யில் நடைபெற்ற பயிற்சி வகுப்பைத் துவக்கி வைத்து அவர் பேசியது:
உலக நாடுகளில் இந்தியாவில் தான் அதிக பரப்பில் மாங்கனி சாகுபடி செய்யப்படுகிறது. ஆண்டுக்கு 1.38 கோடி டன்கள் உற்பத்தி செய்யப்படுகிறது. இது உலக மாங்கனி உற்பத்தியில் 44 சதமாகும். ஆந்திர மாநிலம் சித்தூருக்கு அடுத்ததாக தமிழகத்தின் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தான் அதிகளவில் மாம்பழக் கூழ் தயாரிக்கும் தொழிற்சாலைகள் அமைந்துள்ளன.
இந்த ஆலைகள் ஆண்டுக்கு ரூ.500 கோடி வரை அந்நியச் செலாவணியை ஈட்டித் தருகின்றன. அதிகளவு மாங்கனி சாகுபடி செய்யப்பட்டாலும், மொத்த உற்பத்தியில் 2 சதத்துக்கும் குறைவாகவே ஏற்றுமதி செய்யப்படுகிறது.
ஆனால், மாங்கனி சாகுபடி செய்யும் முக்கிய நாடுகளான மெக்ஸிகோ, பிரேசில், பாகிஸ்தான் ஆகிய நாடுகள் தங்களது உற்பத்தில் ஏறத்தாழ 25 சதம் வரை ஏற்றுமதி செய்கின்றன.

அதேபோல பிரேசிலில் ஹெக்டேருக்கு சராசரியாக 10 டன்கள் உற்பத்தி செய்யப்படுகிறது. இந்தியாவில் 6.3 டன்கள் தான் உற்பத்தி செய்யப்படுகிறது.
மாங்கனி உற்பத்தி செய்யாத குளிர் பிரதேச நாடுகளில் மாம்பழத்தின் தேவை ஆண்டுதோறும் அதிகரித்து வருகிறது. அமெரிக்காவின் தேவையை மெக்ஸிகோ மற்றும் இதர மத்திய அமெரிக்க நாடுகள் தான் பூர்த்தி செய்கின்றன.

குறைவான உற்பத்தித் திறன், பதப்படுத்தல், அறுவடைக்குப் பின் மதிப்பு கூட்டும் தொழில்நுட்பம், சந்தைப்படுத்தலில் உள்ள குறைபாடுகள் ஆகியவற்றை நிவர்த்தி செய்வதற்காக வேளாண் பல்கலை.யில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வழிவகைகள் கண்டறியப்பட்டுள்ளன.
இத் தொழில்நுட்பத்தைக் கையாண்டு பெருகி வரும் மாம்பழத் தேவையை ஈடுகட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என்றார்.

வேளாண் பல்கலை.யின் பழத் துறை தலைவர் டி.என்.பாலமோகன், தோட்டக்கலைக் கல்லூரி முதல்வர் என்.குமார் உள்ளிட்ட பலர் பேசினர். மா சாகுபடியாளர்கள், விற்பனையாளர்கள், ஏற்றுமதியாளர்கள் உள்பட 200க்கும் மேற்பட்டோர் இப் பயிற்சியில் பங்கேற்றனர்.

**விவசாயிகளுக்கு பண்ணை இயந்திர மயமாக்கல் பயிற்சி**

First Published : 03 Feb 2010 09:14:00 AM IST

பெரம்பலூர், பிப். 2: பெரம்பலூர் மாவட்ட விவசாயிகளுக்கு பண்ணை இயந்திர மயமாக்கல் பயிற்சி அளிக்கப்பட உள்ளதாக மாவட்ட ஆட்சியர் எம். விஜயகுமார் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர், செவ்வாய்க்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தமிழ்நாடு அரசு வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் விவசாயிகளுக்கு பண்ணை இயந்திர மயமாக்கல் பயிற்சி அளிக்கப்பட உள்ளது. பிப்ரவரி இரண்டாவது வாரம் முதல் நடைபெறும் இப் பயிற்சி, பெரம்பலூர் மாவட்டத்தில் இரண்டு வாரம் நடைபெறுகிறது.

பவர் டில்லர் இயக்குதல், பராமரித்தல் மற்றும் மேலாண்மை பயிற்சி, நடவு இயந்திரம், களை எடுக்கும் கருவி, கதிரடிக்கும் கருவி, அறுவடை இயந்திரக் கருவிகள் உள்ளிட்ட பயிற்சிகள் அளிக்கப்பட உள்ளது. இந்தப் பயிற்சியில் கலந்து கொள்ள 18 வயது முதல் 40 வயது வரை உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

பயிற்சியில் கலந்து கொள்ளும் விவசாயிகளுக்கு அரசு விதிமுறைகளின் படி, பயிற்சி முடிவின்போது உதவித் தொகை, சான்றிதழ் வழங்கப்படும். பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள விவசாயிகள், உதவி செயற் பொறியாளர், 158 புதுக் காலனி, வடக்குத் தெரு, துறைமங்கலம், பெரம்பலூர் என்ற முகவரியில் உள்ள அலுவலகத்தை தொடர்பு கொண்டு விண்ணப்பிக்கலாம் என்றார் அவர்.

தினமலர்

**புகையான் பூச்சியை கட்டுப்படுத்த யோசனை**

அரியலூர்,: நெல்பயிரில் புகையான் பூச்சியை கட்டுப்படுத்த வேளாண்துறை யோசனை தெரிவித்துள்ளது.செந்துறை வட்டாரத்தில் தற்சமயம் நடவு செய்யப்பட்டுள்ள சம்பா நெல் பயிர் வளர்ச்சி பருவம், பூப்பருவம், அறுவடை பருவம் ஆகிய நிலைகளில் உள்ளது.
செந்துறை பெரிய ஏரி, நக்கம்பாடி புது ஏரி, பெரிய ஏரி, குமுளூர் பெரிய ஏரி ஆகிய பாசன ஏரிகளில் நடவு செய்யப்பட்டுள்ள நெல் பயிர்களில் பூப்பருவம் மற்றும் அறுவடை பருவம் ஆகிய நிலையில் உள்ள நெல் பயிர்களில் தற்சமயம் ஆங்காங்கே ""புகை யான் பூச்சியின் தாக்குதல்'' காணப்படுகிறது.புகையான் பூச்சி தாக்குதலின் அறிகுறிகள் புகையான் பூச்சி நெல் பயிரின் தண்டுப் பகுதியில் (நெல் பயிரின் அடிப்பாகத்தில்) இருந்து சாற்றை உறிஞ்சி சாப்பிடும். தண்டு பகுதியை கையினால் தட்டினால் கொசு போல புகையான் பூச்சி பறப்பதைக் காணலாம். தண்டுப் பகுதியில் ஏராளமான புகையான் பூச்சிகள் சாற்றை உறிஞ்சுவதால் பயிர் வட்ட வட்டமாக காய்ந்து சருகு போல தீயினால் எரித்தது போல் காணப்படும்.

கட்டுப்படுத்தும் முறைகள் � தாக்குதல் காணப்படும் வயல்களில் நீரை உடனடியாக வடிக்க வேண்டும். வயலில் இருந்து தண்ணீரை சுத்தமாக வடித்து விட வேண்டும்.� நெல் பயிரை பட்டம் பட்டமாக பிரித்து இரண்டு பக்கமும் நெல் பயிரின் தண்டுப் பகுதி சூரிய ஒளி படும்படி ஒதுக்கிவிட வேண்டும்.� வயலில் விளக்குப்பொறி வைத்து புகையான் பூச்சி இருப்பதை கண்காணிக்க வேண்டும்.� தழைச்சத்து உரமான யூரியாவை இடக்கூடாது. பாதிக்கப்பட்ட பயிரில் தண்டுப்பகுதி நன்கு நனையும் படி மருந்து அடிக்க வேண்டும்.கீழ்கண்ட மருந்துகளில் ஏதேனும் ஒரு மருந்தை கைத்தெளிப்பானால் மட்டுமே ஒரு ஏக்கருக்கு அடிக்கவும், (விசைத் தெளிப்பானால் கட்டாயம் மருந்து அடிப்பதை தவிர்க்க வேண்டும்)இமிடாகுளோபிரிட் - 75 மிலி(அல்லது)அசிபேட் - 200 கிராம்(அல்லது) வேப்பங்கொட்டை சாறு ஊற வைத்து அடிக்கவும்.மேலும் விபரங்களுக்கு உங்கள் பகுதிக்கு வரும் உதவி வேளாண் அலுவலர், துணை வேளாண் அலுவர்களையோ அல்லது செந்துறை வேளாண் விரிவாக்க மையத்தையோ அணுகி பயனடையுமாறு செந்துறை வட்டார வேளாண் உதவி இயக்குநர் ராஜேந்திரன் கேட்டுக் கொண்டுள்ளார்.

**துவங்கியது தர்பூசணி 'சீசன்' : ரோட்டோர கடைகளும் முளைத்தது**

பொள்ளாச்சி : பொள்ளாச்சியில், தர்பூசணி சீசன் துவங்கியுள்ளதையடுத்து வெளி மாநில வியாபாரிகள் ரோட்டோர கடைகள் அமைத்து தர்பூசணி விற்பனை செய்து வருகின்றனர்.

கோடை காலம் முடியும் வரை தர்பூசணி பழத்திற்கு மக்களிடையே அமோக வரவேற்பு இருக்கும். இதன் காரணமாக, பிற மாநிலங்களிலிருந்து பொள்ளாச்சி பகுதியில் விற்பனை செய்வதற்காக மக்கள் வருகின்றனர். இந்த ஆண்டு கோடைக்காலம் துவங்குவதற்கு முன்பே, தர்பூசணி பழம் விற்பனைக்காக பொள்ளாச்சிக்கு வந்ததால், கோடை காலத்திற்கு முன்பே தர்பூசணி சீசன் துவங்கிவிட்டது. பொள்ளாச்சி பகுதிக்கு பெங்களூரு, சேலம் உள்ளிட்ட பகுதிகளிலிருந்து தர்பூசணி பழங்கள் வரத்துள்ளன. தினமும் 500 முதல் ஆயிரம் பழங்கள் வரை விற்பனைக்காக வருகிறது. பொள்ளாச்சி நகர் மற்றும் சுற்றுப்பகுதிகளில் உள்ள முக்கிய பகுதிகளில் ரோட்டோர வண்டிகளிலும், தனியாக கடைகள் அமைத்தும் விற்பனை செய்து வருகின்றனர். ரோட்டோர கடைகளில் கிலோ 12 ரூபாய் வரையிலும், ஒரு பிளேட் பத்து ரூபாய்க்கும் விற்பனையாகிறது. ஒரு பழம் ரூபாய் 50 ரூபாய் முதல் விற்பனையாகிறது.

பொள்ளாச்சி பகுதி தர்பூசணி வியாபாரிகள் கூறியதாவது: வழக்கமாக கோடை காலம் துவங்குவதற்கு சில நாட்களுக்கு முன்பு தான் அந்தந்த பகுதிகளுக்கு தர்பூசணி பழங்கள் கொண்டு வரப்படும். ஆனால், இம்முறை தர்பூசணி விளைச்சல் இருப்பதால் ஜனவரி மாதத்திலேயே தர்பூசணி விற்பனை துவங்கி விட்டது. வெயிலின் தாக்கம் அதிகமாக இருப்பதால் மக்களிடையே தர்பூசணிக்கு அமோக வரவேற்பு கிடைத்துள் ளது. வரும் மாதங்களில் விற்பனை சற்று அதிகமாக இருக்கும். இவ்வாறு, தர்பூசணி வியாபாரிகள் தெரிவித்தனர்.

**நெகமத்தில் கொப்பரை கிலோ ரூ. 33.50**

பொள்ளாச்சி : நெகமத்தில் நடந்த கொப்பரை ஏலத்தில் ஒரு கிலோவுக்கு அதிகபட்சமாக 33.50 ரூபாய் விலை கிடைத்தது.நெகமம் சுற்றுப்பகுதி விவசாயிகள் 19 பேர், ஒழுங்குமுறை விற்பனைக்கூட ஏலத்திற்கு 114 மூட்டை கொப்பரையை ஏலத்திற்கு கொண்டு வந்தனர். மொத்தம் ஏழு வியாபாரிகள் கொப்பரையை தரம் பிரித்து ஏலம் கூறினர். ஒழுங்குமுறை விற்பனைக்கூட கண்காணிப்பாளர் சண்முகம் ஏலம் நடத்தினார். முதல் தர கொப்பரை 27 மூட்டையில், கிலோவுக்கு குறைந்தபட்சம் 31.10 ரூபாய் முதல், அதிகபட்சம் 33.50 ரூபாய் வரை விலை கிடைத்தது. இரண்டாம் தர கொப்பரை 87 மூட்டையில், கிலோவுக்கு குறைந்தபட்சம் 21 ரூபாய் முதல், அதிகபட்சம் 30.80 ரூபாய் வரை விலை கிடைத்தது.

அதிகாரிகள் கூறுகையில், "வெளிமார்க்கெட்டில் கொப்பரை விலை அதிகபட்சமாக 36 ரூபாய் வரையுள்ளது. ஆனால், ஏலத்திற்கு கொண்டு வரப்பட்ட கொப்பரையில் ஈரப்பதம் அதிகமாக இருந்ததால் இரண்டாம் தர கொப்பரையாக கணக்கில் கொள்ளப்பட்டது. அதிலும் தரமான கொப்பரையாக 27 மூட்டை தரம் பிரித்து ஏலம் விடப்பட்டது. கடந்த வாரத்துடன் ஒப்பிடும் போது கொப்பரை வரத்து அதே அளவுக்கு இருந்தாலும், விலையில் கிலோவுக்கு 2.25 ரூபாய் உயர்ந்துள்ளது' என்றனர்.

**வரகு பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம்**

சிறுபாக்கம் : மங்களூர் ஒன்றிய பகுதி விவசாயிகள் தற்போது வரகு தானியம் பயிரிடுவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். மங்களூர் ஒன்றியம் சிறுபாக்கம், மங்களூர், மலையனூர், அரசங்குடி, அடரி, களத்தூர், கழுதூர், வப்பூர் அடுத்த பெரிய நெசலூர், கீழ் ஒரத்தூர் உள்ளிட்ட கிராமங்களில் உள்ள மானாவாரி நிலங்களில் 20 ஆண்டுகளுக்கு முன்பு வரை நாட்டு சோளம், வரகு தானியங்களையே பயிரிட்டு வந்தனர்.

அப்பகுதி மக்கள் இரவில் வரகு சாப்பாடும், பகலில் நாட்டு சோள கூழ் உண்டு வந்தனர். இதனால் தேக ஆரோக்கியத்துடன் சர்க்கரை, காசநோய், நரம்பு தளர்ச்சி உள்ளிட்ட நோய்கள் இல்லாமல் உடலில் நோய் எதிர்ப்பு சக்தியுடன் வாழ்ந்து வந்தனர்.அதன்பிறகு இப்பகுதியிலும் உணவு முறையில் மாற்றம் வந்ததால் வரகு, நாட்டு சோளம் பயிரிடுவது படிப்படியாக குறைந்தது. அதற்கு பதிலாக மக்காசோளம், பருத்தி உள்ளிட்ட பணப் பயிர்களையே உற்பத்தி செய்திட ஆர்வம் காட்டினர். இதனால் வரகு கிடைப்பது மிகவும் அரிதாக இருந்தது.

இந்நிலையில் குழந்தைகளுக்கான உணவு பொருட்கள் விற்பனையும், சர்க்கரை நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்ததை தொடர்ந்து வரகு அரிசியின் தேவையும் அதிகரித்தது.இதனால் மங்களூர் பகுதியில் குறைந்த அளவில் அறுவடை செய்யப்படும் வரகு தானியத்தை தேனி, பரமக்குடி பகுதி வியாபாரிகள் நெல் விலைக்கு இணையாக 800 ரூபாய் வரை விலை கொடுத்து வாங்கினர்.நன்செய் நிலங்களில் அதிக செலவு செய்து பயிரிடப்படும் நெல்லுக்கு இணையாக மானாவாரி நிலங்களில் குறைந்த செலவில் பயிரிடப்படும் வரகு தானியத்திற்கு விலை கிடைப்பதை அறிந்த மங்களூர் ஒன்றிய விவசாயிகள் தற்போது வரகு பயிரிடுவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

**காலிஃபிளவர் ரூ.10க்கு கூவிக்கூவி விற்பனை**

ஈரோடு: காலிஃப்ளவர் உற்பத்தி அதிகரித்துள்ளதால் ஈரோட்டுக்கு வரத்து அதிகரித்து விலை சரிந்துள்ளது.ஈரோடு பெரிய மார்க்கெட்டில் ஒரு மாதத்துக்கு முன் வரை காலிஃப்ளவர் கிலோ 25 ரூபாய்க்கு மேல் விற்கப்பட்டது. சிறுவர், சிறுமியர் முதல் பெரியவர்கள் வரை காலிஃப்ளவரை விரும்பி சாப்பிடுகின்றனர். தினமும் மாலை, இரவு நேரத்தில் காலிஃப்ளவர் ஃப்ரை சாப்பிடுவதற்கு என தனிக்கூட்டமே உள்ளது. "டாஸ்மாக்' மதுக்கடை பார்களில் இதன் ஆதிக்கம் அதிகமாக உள்ளது.

நீலகிரி மாவட்டத்தில் குன்னூர், ஊட்டி, கூடலூர், ஈரோடு மாவட்டத்தில் தாளவாடி, ஆசனூர் மலைப்பகுதியில் காலிஃப்ளவர் அதிகளவு விளைகிறது. ஆசனூர் மலைப்பகுதியில் விளைச்சல் அதிகரிப்பால், ஈரோடு மாவட்டம் முழுவதும் வேன், லாரிகளில் காலிஃப்ளவர் விற்பனை சூடுபிடித்துள்ளது. ஈரோட்டில் கொல்லம்பாளையம், மூலப்பாளையம், சோலார், திண்டல், சென்னிமலை ரோடு ஆகிய இடங்களில் காலிஃப்ளவரை குவித்து வைத்து விற்பனை செய்கின்றனர்.

மூன்று பெரிய காலிஃப்ளவர் 10 ரூபாய்க்கு விற்பனையாகிறது. மிகவும் அடிமட்ட விலைக்கு விற்கப்படுவதால் பலர் ஆர்வத்துடன் வாங்கி செல்கின்றனர். வியாபாரிகள் கூறுகையில், ""நடப்பாண்டு ஆசனூர் மற்றும் ஓசூர் பகுதி விவசாயிகள் அதிகளவு காலிஃப்ளவர் பயிரிட்டனர். அதற்கு பலனும் கிடைத்துள்ளது. இப்பகுதியில் உற்பத்தி செய்யப்படும் காலிஃப்ளவர் கோபி, சத்தியமங்கலம், சாம்ராஜ்நகர், ஒசூர், பெங்களூரு ஆகிய பகுதிகளுக்கு மட்டுமே விநியோகம் செய்யப்பட்டு வந்தது. அதிகளவு உற்பத்தியானதால், ஈரோடு மாவட்டம் முழுவதும் விற்பனைக்கு குவிந்துள்ளது," என்றனர்.

**உற்பத்தி குறைவால் பருத்திக்கு கூடுதல் விலை**

கோபிசெட்டிபாளையம்: கோபி மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளில் சென்றாண்டு ஏற்பட்ட மழை குறைவால் பருத்தி உற்பத்தியும் குறைந்துள்ளது. இதனால், சென்றாண்டை விட பஞ்சுக்கு கூடுதல் விலை கிடைத்துள்ளது. உலகளவில் இந்தியாவில்தான் அதிகளவில் பருத்தி பயிரிடப்பட்டு வந்தது. நாளடைவில் சீதோஷ்ண நிலையில் மாற்றம், மழை குறைவு, விவசாய கூலியாட்கள் பற்றாக்குறை காரணமாக பருத்தி சாகுபடி கணிசமான அளவு குறைந்தது.

பருத்தி சாகுபடி மற்றும் பருத்தி துணி உற்பத்தி மூலம் மறைமுகமாகவும், நேரடியாகவும் லட்சக்கணக்கான பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கிறது. இதனால், பருத்தி உற்பத்தியை மத்திய, மாநில அரசுகளும் பல்வேறு வகையில் ஊக்குவிக்கின்றன. குறிப்பாக ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை திட்டத்தின் கீழ் பருத்தி பயிரிடப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் நீர் மற்றும் களை நிர்வாகம், பயிர் பாதுகாப்பு, ஊட்டச்சத்து முறைகள் விவசாயிகளுக்கு அறிவுறுத்தப்படுகிறது. ஈரோடு மாவட்டத்தில் எம்.சி.யு.-5, 12, 13, சுரபி மற்றும் எஸ்.வி.பி.ஆர்.-2 ஆகிய பருத்தி ரகங்கள் அதிகளவில் பயிரிடப்படுகிறது. கடந்த பத்தாண்டுகளுக்கு முன் பத்தாயிரம் ஹெக்டேரில் பருத்தி பயிரிடப்பட்டது. தற்போது, வெறும் 500 ஹெக்டேராக சுருங்கி விட்டது. மூன்று மாத பயிரான பருத்தியை பயிரிடும் விவசாயிகளும் பெருமளவில் குறைந்து விட்டனர்.

கோபி பகுதியில் சிறுவலூர், வெள்ளாங்கோயில், கொளப்பலூர், வேட்டைக்காரன் கோவில், அத்தாணி, கள்ளிப்பட்டி, துறையம்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் பருத்தி பயிரிடப்பட்டுள்ளது. சென்றாண்டு ஒரு கிலோ பஞ்சுக்கு 25 ரூபாய் வரை கிடைத்தது. மழை மற்றும் உற்பத்தி குறைவால் நடப்பாண்டு ஒரு கிலோ பஞ்சுக்கு 30 வரை கிடைக்கிறது. கோபி பகுதியில் குறைந்தளவில் பருத்தி பயிரிட்டிருந்தாலும். கூடுதல் விலை கிடைப்பதால் பருத்தி விவசாயிகள் சற்று தெம்பில் உள்ளனர். "பருத்தியுடன் ஆமணக்கு மற்றும் செண்டுமல்லி பயிர்களை விவசாயிகள் பயிரிட்டு வருவதால் கூடுதல் லாபம் கிடைக்கிறது.

**முள்ளங்கி அறுவடை கோபியில் ஆரம்பம்**

கோபிசெட்டிபாளையம்: கோபி சுற்று வட்டாரப் பகுதிகளில் முள்ளங்கி அறுவடை துவங்கியுள்ளது. திருமண சீஸன் காலமாக இருந்த போதிலும் அதிக வரத்தால் முள்ளங்கி விலை வெகுவாக குறைந்துள்ளது. கோபி அரக்கன்கோட்டை, தடப்பள்ளி மற்றும் கீழ்பவானி பாசன பகுதிகளில் நெல், மஞ்சள் மற்றும் கரும்பு உள்ளிட்ட பயிர்களை தொடர்ந்து, தோட்டக்கலை பயிர்களான கத்தரி, வெண்டை, முள்ளங்கி பயிர்களை விவசாயிகள் அதிகளவில் பயிரிட்டு வருகின்றனர். கோபி, பங்களாப்புதூர், மாக்கினாங்கோம்பை, கொளப்பலூர், வாணிப்புத்தூர், டி.என்.பாளையம், அத்தாணி, கள்ளிப்பட்டி, துறையம்பாளையம், சிறுவலூர், குருமந்தூர் உள்ளிட்ட பகுதிகளில் மூன்று மாதங்களுக்கு முன் வெண்டைக்காய், கத்தரிக்காய் மற்றும் முள்ளங்கி போன்ற பயிர்களை பயிரிட்டனர். தற்போது அறுவடை துவங்கியுள்ளது.

பொதுவாக திருமண சீஸன் காலங்களில் சாம்பார் மற்றும் பொறியல் வகைகளில் அதிகம் பயன்படுத்தப்படும் முள்ளங்கி, கத்தரிக்காய் போன்ற காய் வகைளுக்கு அதிக கிராக்கி ஏற்படும். இதனால், விலையும் அதிகமாக இருக்கும். கடந்த மாதம் ஒரு கிலோ வெள்ளை முள்ளங்கி 12 ரூபாய் வரை விற்றது. கோபி பகுதியில் முள்ளங்கி அறுவடை துவங்கியுள்ளது. இதனால், தற்போது முள்ளங்கி, கிலோ ஐந்து ரூபாயாக குறைந்துள்ளது. முள்ளங்கிக்கு விலை குறைவாக கிடைத்தாலும், திருமண சீஸன் காலம் என்பதால் உடனடியாக விற்பனையாகிறது. இதனால் கோபி பகுதியில் முள்ளங்கி பயிரிட்டுள்ள விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.

**உழவர் ஆய்வு மன்ற பயிற்சி**

கரூர்:கரூர் உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை உதவி இயக்குனர் மூலம் நடப்பு ஆண்டிற்கான உழவர் ஆய்வு மன்ற அமைப்பாளர்களுக்கான பயிற்சி குளித்தலை உழவர் சந்தையில் நடந்தது.மேட்டுமருதூர் உழவர் ஆய்வு மன்ற அமைப்பாளர் மகாதானபுரம் ராஜாராம் தலைமை வகித்து வேளாண் இயந்திரங்கள் குறித்து பேசினார்.

கரூர் உழவர்பயிற்சி நிலைய வேளாண்மை அலுவலர் மோகன்குமார் செம்மை நெல்சாகுபடியில் உள்ள நவீன தொழில்நுட்பங்கள் குறித்தும், குளித்தலை உழவர் ஆய்வு மன்ற அமைப்பாளர் கோபாலதேசிகன் உழவர் ஆய்வு மன்றம் எப்படி செயல்பட வேண்டும் என்றும் பேசினர்.

விவசாயி ராஜேஸ்வரி தனது செம்மை நெல் சாகுபடி குறித்து விவசாயிகளிடம் விளக்கி பேசினார். உழவர் சந்தை நிர்வாக அலுவலர் அபுபக்கர் உழவர் சந்தையில் காய்கறிகளை விற்பனை செய்ய அடையாள அட்டை பெறும் முறைகள் பற்றி பேசினா�ர்.சதீஸ் நன்றி கூறினார்.

**விலை குறையாத ஆப்பிள்**

மதுரை: மதுரைக்கு ஆப்பிள் வரத்து அதிகரித்துள்ள போதும், விலை குறையவில்லை. நேற்று ஒரு கிலோ 90 ரூபாய் முதல் 110 ரூபாய் வரை விற்கப்பட்டது. வாஷிங்டன் ஆப்பிள் 120 ரூபாய், சீன ஆப்பிள் 90 ரூபாய்க்கு விற்கப்பட்டது. மாதுளை 70 ரூபாய், காபூல் மாதுளை 120, சோனா திராட்சை 50, மஸ்கட் திராட்சை 70, பன்னீர் திராட்சை 35, மால்டா ஆரஞ்சு 50, சாத்துக்குடி 40, சீன பேரிக்காய் 70, அன்னாசி 25, பப்பாளி 10, சப்போட்டா 20, மோரீஸ் வாழை 20, கிர்னிபழம் 30, நெல்லிக்காய் 40க்கும் விற்கப்படுகிறது.

**சென்ட்ரல் மார்க்கெட்டிற்கு காய்கறி வரத்து அதிகரிப்பு**

மதுரை: மதுரை சென்ட்ரல் மார்க்கெட்டிற்கு வரத்து அதிகரித்து உள்ளதால், சீரான விலையில் காய்கறி விற்கப்படுகிறது.

சங்கத் தலைவர் முருகன் கூறியதாவது : நேற்று ஒரு கிலோ தக்காளி 10 ரூபாய், உருட்டு தக்காளி 8, கத்தரிக் காய் 20, வெள்ளை கத்தரிக்காய் 16, பூசணிக்காய் 5, புடலங்காய் 7, வெண்டைக்காய் 10, முள்ளங்கி 8, பீட்ரூட் 10, கேரட்

9, நூக்கல் 7, சுரைக்காய் 6, வெங்காயம் 6, சிறியது 12, பாகற்காய் 15, சிறியது 20, இஞ்சி 35, காலிபிளவர் 6-8, முட்டைகோஸ் 4, பீன்ஸ் 18, பட்டர் பீன்ஸ் 50, சோயா பீன்ஸ் 35, உருளைகிழங்கு 12, கருணை கிழங்கு 15, சேனை கிழங்கு 18, பட்டாணி 30, முருங்கைக்காய் 40, அவரைக்காய் 10, கொத்தவரை 5, பச்சை மொச்சை 15, பச்சை மிளகாய் 20, ஆந்திரா பச்சை மிளகாய் 15, கீரை வகைகள் 10, புதினா 6, கறிவேப்பிலை 20, கொத்தமல்லி 15 ரூபாய்க்கு விற்கப்படுகிறது என்றார். சென்ட்ரல் மார்க்கெட் விலைக்கும், மற்ற இடங்களில் விற்கும் காய்கறி விலைக்கும் சம்பந்தமில்லை.

**மல்லிகை விலை குறைகிறது**

மதுரை: மதுரையில் மல்லிகை சீசன் ஆரம்பித்துள்ளதால், விலை குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த வாரம் அடுத்தடுத்து முகூர்த்த நாட்கள் காரணமாக, ஒரு கிலோ மல்லிகை 700 ரூபாய் வரை விற்கப்பட்டது. மல்லிகை வரத்து குறைவாக இருந்ததும் ஒருகாரணம். தற்போது சீசன் ஆரம்பித்துள்ளதால் கிலோ 250 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.

""அடுத்த வாரம் மேலும் விலை குறைய வாய்ப்புள்ளது,'' என்கிறார் பூ மார்க்கெட் சங்கத் தலைவர் ராமச்சந்திரன். மற்ற பூ விலை குறித்து கூறுகையில், ""ஒரு கிலோ பிச்சிப்பூ 300 ரூபாய், ரோஜா 40, சம்பங்கி 50, கனகாம்பரம் 400, செவ்வந்தி 40, அரளி 40, மரிக்கொழுந்து 30-40, மெட்ராஸ் மல்லி 100, கோழிக்கொண்டை 40 ரூபாய்க்கு விற்கப்படுகிறது,'' என்றார்.

**சமையல் எண்ணெய் விலை குறைவு**

மதுரை: சர்வதேச சந்தையில் சமையல் எண்ணெய் விலை குறைவால், மதுரையிலும் விலை குறைந்துள்ளது. எண்ணெய் வியாபாரிகள் சங்க முன்னாள் செயலாளர் கிருஷ்ணமூர்த்தி கூறியதாவது : கடந்த வாரம் 630 ரூபாய்க்கு விற்ற 15 கிலோ டின் பாமாயில் நேற்று 620 ரூபாய்க்கும், ரைஸ்பிரான் ஆயில் 690 ரூபாயிலிருந்து 665 ரூபாய்க்கும் விற்கப்பட்டது. சூரியகாந்தி எண்ணெய் 830 ரூபாய், கடலை எண்ணெய் 1080, வனஸ்பதி 700, நல்லெண்ணெய் 1350, தும்பை நல்லெண்ணெய் 1820, தேங்காய் எண்ணெய் 980 ரூபாய் என்பதில் மாற்றமில்லை என்றார்.

**அரிசி விலையில் மாற்றமில்லை**

மதுரை: மதுரையில் கடந்த வார விலையிலேயே இந்த வாரமும் அரிசி விற்பனை நடக்கிறது. அரிசி ஆலை உரிமையாளர் சங்க செயலாளர் சந்திரன் கூறியதாவது: ஒரு கிலோ வெள்ளை பொன்னி புதுசு 26 ரூபாய், டீலக்ஸ் பொன்னி 25.50 ரூபாய், கல்சர் பொன்னி மற்றும் ஐ.ஆர்., 20 ரக அரிசி 20 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.

டீலக்ஸ் பொன்னி பழசு கிலோ 33 ரூபாய், கல்சர் பொன்னி பழசு 22, வெள்ளை பொன்னி 33, கர்நாடகா டீலக்ஸ் பொன்னி 38, செல்லப்பொன்னி 23, அம்பை பதினாறு 21.50, பச்சரிசி நயம் 38, அடுத்த ரகம் 34, மாவு பச்சரிசி 20, பிரியாணி அரிசி 54, அடுத்த ரகம் 50, நடப்பு பிரியாணி அரிசி 45 ரூபாய்க்கு விற்கப்படுகிறது என்றார்.

**நிலக்கடலைக்கு மானிய விலையில் உரம் விற்பனை**

ராசிபுரம்: "நிலக்கடலை பயிருக்கு மானிய விலையில் உரம் விற்பனை செய்யப்படுகிறது' என, ராசிபுரம் வேளாண் உதவி இயக்குனர் சுப்ரமணியன் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை: ராசிபுரம் பகுதியில் நிலக்கடலை விதைத்த 35 நாட்களில் டி.ஏ.பி., ஐந்து கிலோ, அம்மோனியம் சல்பேட் இரண்டு கிலோ, போராக்ஸ் ஒரு கிலோ என இந்த நுண்ணூட்டங்களை இரு முறை தெளிக்க வேண்டும். ஒவ்வொரு முறைக்கும் 500 லிட்டர் தண்ணீர் தேவை. இதனால் பூ உதிர்வது தடுக்கப்படுகிறது. மேலும் விழுது இறங்குவது அதிகரிக்கிறது. தேசிய

வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் மேற்கண்ட பொருட்கள் 200 ரூபாய்க்கு மானிய விலையில் வழங்கப்படுகிறது. இதை விவசாயிகள் பெற்று பயன்பெறலாம். இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**மரபணு மாற்ற கத்திரிக்காய் சர்ச்சை : விவாத மேடையில் காரசார பரிமாற்றம்**

குன்னூர் : ""மரபணு மாற்ற கத்தரிக்காயை அனுமதிப்பது தொடர்பான முழு அளவிலான ஆய்வு முடிவடையாத நிலையில், அவற்றை அனுமதிக்க சில அமைச்சர்கள், அதிகாரிகள் அவசரம் காட்டுகின்றனர்," என விவாத மேடையில் குற்றம் சாட்டப்பட்டது.

தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் சார்பில் குன்னூர் ஒய்.எம்.சி.ஏ., அரங்கில் "மரபணு மாற்ற கத்தரிக்காய் குறித்த விவாத மேடை நடத்தப்பட்டது. அறிவியல் இயக்க மாநில துணை தலைவர் சுப்ரமணியம் சிறப்பு விருந்தினராக பங்கேற்று பேசுகையில், ""கடந்த கால வரலாற்றை புரட்டி பார்க்கும் போது, ஒரு புதிய தொழில்நுட்பம் வரும் போது அதை ஒரு சாரார் எதிர்ப்பது வழக்கமாகிவிட்டது. இருப்பினும், மரபணு மாற்ற உணவுப் பொருட்களை ஐரோப்பிய நாடுகள் தங்கள் நாட்டில் பயிர் செய்யவும், விற்கவும் தடை விதித்துள்ளன. எனவே, மரபணு மாற்ற கத்தரிக்காயை இந்தியாவில் அனுமதிக்கக் கூடாது," என்றார்.

குன்னூர் பாஸ்டியர் ஆய்வக நிறுவன உதவி இயக்குனர் டாக்டர். வெங்கட்ரமணா பேசுகையில், ""மரபணு மாற்ற கத்தரிக்காயை பொறுத்தவரை அரைகுறை ஆராய்ச்சிகள் மட்டும் செய்யப்பட்டு, பன்னாட்டு நிறுவனத்தின் வியாபார நோக்கத்திற்காக அவசர கதியில், இந்தியாவில் அவற்றை அறிமுகப்படுத்த முயற்சி நடக்கிறது; மக்கள் இதை எதிர்க்க வேண்டும்," என்றார்.

பாஸ்டியர் நிறுவன இளம் விஞ்ஞானி டாக்டர். சிவானந்தா பேசுகையில், "" கத்தரிக்காயின் மரபணுவுடன் பாஸில்லஸ் துரங்கசீயஸ் என்ற மண்ணிலுள்ள பாக்டீரியாவின் மரபணுவை இணைத்து பி.டி. கத்திரிக்காய் உற்பத்தி செய்யப்படுகிறது. கத்தரிக்காயில் உண்டாகும் பூச்சிகளை கொல்லும் ஆற்றல் கொண்ட ஒருவித விஷப்பொருளை உள்ளடக்கிய புரதத்தை உற்பத்தி செய்யும் இந்த பாக்டீரியா, கத்திரிக்காயை உண்ணும் மனித உடலில் எத்தகைய மாற்றத்தை உண்டு பண்ணும் என்பதை குறித்து சரியான தகவல்கள் இல்லை," என்றார்.

குன்னூர் பிராவிடன்ஸ் மகளிர் கல்லூரி பேராசிரியை டாக்டர். சுஜாதா பேசுகையில், ""நம் நாட்டில் உள்ள 250க்கும் மேற்பட்ட கத்தரிக்காய் இனங்கள், இந்த பி.டி. கத்தரிக்காயினால் முற்றிலும் அழியும். சுவையற்ற இத்தகைய உணவுப் பொருட்களை அனுமதிக்க கூடாது," என்றார்.

அறிவியல் இயக்க மாவட்ட செயலர் ஆசிரியர் ராஜு பேசுகையில், ""பி.டி. கத்தரிக்காயை அனுமதிப்பது குறித்து முடிவெடுக்க மத்திய அரசு 30 விஞ்ஞானிகளை கொண்ட குழுவை அமைத்துள்ளது; உச்சநீதிமன்றம் உஷா பார்கவா என்ற விஞ்ஞானியை பார்வையாளராக நியமித்துள்ளது. பி.டி. கத்தரிக்காயை அனுமதிக்கும் முன், 30 சோதனைகள் செய்யப்பட வேண்டும்; இதுவரை 12 சோதனைகள் மட்டுமே செய்யப்பட்டுள்ளன. அதற்குள் சில மத்திய அமைச்சர்கள், உயர் அதிகாரிகள், பி.டி., கத்தரிக்காயை உடனடியாக அனுமதிக்க வேண்டும் என வற்புறுத்துகின்றனர். பன்னாட்டு நிறுவனம் இந்திய மக்களின் நல்வாழ்வை வியாபாரமாக்கி பணம் சம்பாதிக்கிறது," என குற்றம் சாட்டினார்.

குன்னூர் நுகர்வோர் பாதுகாப்பு சங்க தலைவர் மனோகரன் பேசுகையில், ""இதுபோன்ற விஷ உணவுப் பொருட்களை சோதித்து பார்க்க இந்திய மக்கள் எலிகள் அல்ல; இந்தியா, பிற நாடுகளின் குப்பை தொட்டியாக மாறிவருகிறது," என்றார்.

பாஸ்டியர் நிறுவன ஆராய்ச்சியாளர் ஜெகநாதன் பேகையில், ""இந்தியாவில் உள்ள குழந்தைகளில் 46 சதவீதம் பேர் ஊட்டச்சத்து குறைந்தவர்களாக உள்ளனர் என ஐ.நா., சபை அறிவித்துள்ளது. இதற்கு காரணம் நம் நாட்டில்

ஊட்டச்சத்து மிக்க உணவுப் பொருட்கள் போதுமான அளவிற்கு இருந்தாலும், அதை வாங்கி உண்ணும் ஆற்றல் மக்களில் பாதிபேருக்கு இல்லை" என்றார்.

இந்த நிகழ்ச்சிக்கு, அறிவியல் இயக்க மாவட்ட தலைவர் பெள்ளி தலைமை வகித்தார். தேசிய பசுமைப்படை திட்ட மாவட்ட ஒருங்கிணைப்பாளர் லட்சுமி நாராயணன், அருவங்காடு கிராமிய அபிவிருத்தி இயக்க கள நிர்வாகிகள், குன்னூர் பழங்குடியினர் மற்றும் மேம்பாட்டு அறக்கட்டளையை சேர்ந்த சுதா, சிந்தா தேவி, கல்லூரி மாணவிகள், பொது நல அமைப்பினர் பங்கேற்று கருத்துகளை பரிமாறி கொண்டனர்.

**திடக்கழிவு மேலாண்மைக்கு ஒத்துழைப்பு அவசியம் : உள்ளாட்சிகளின் கலந்தாய்வு கூட்டத்தில் கருத்து**

குன்னூர் : "ஊராட்சிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தை முழு அளவில் நடைமுறைப்படுத்த பேரூராட்சி, நகராட்சிகளின் ஒத்துழைப்பு அவசியம்,' என கலந்தாய்வு கூட்டத்தில் யோசனை தெரிவிக்கப்பட்டது.

மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகத்தின் உதவியுடன் சி.பி.ஆர்., சுற்றுச்சூழல் கல்வி மையத்தின் சார்பில் திடக்கழிவு மேலாண்மை திட்ட செயல்பாடு குறித்த உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகளுக்கான கலந்தாய்வு கூட்டம் குன்னூர் விவேக் அரங்கில் நடத்தப்பட்டது.  சி.பி.ஆர்., சுற்றுச்சூழல் கல்வி மைய மாவட்ட ஒருங்கிணைப்பாளர் குமாரவடிவேலு வரவேற்றார். குன்னூர் ஊராட்சி ஒன்றிய தலைவி லட்சுமி பேசுகையில், ""குன்னூர் ஊராட்சிப் பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தை மேற்கொள்ள பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன; மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலம் இத்திட்டத்தை செயல்படுத்தவும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது; இருப்பினும், திட்டத்தை உரிய முறையில் செயல்படுத்த முடியவில்லை. பல கிராமங்கள் சுகாதாரமற்ற நிலையில் தான் உள்ளன. குன்னூர் ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் குப்பைகளை சேகரிக்க குப்பை வாகனங்கள் தேவைப்படுகின்றன.  திடக்கழிவு மேலாண்மை திட்டம் குறித்த பயிற்சிகள் பயனளிக்கும் வகையில் இருக்க வேண்டும்," என்றார்.

தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரிய உதவி பொறியாளர் மதிவாகணன் பேசுகையில், ""கடந்த 2000ம் ஆண்டு மாநில அரசால் அறிமுகப்படுத்த திடக்கழிவு மேலாண்மை திட்டத்தை உள்ளாட்சி அமைப்புகளில் நிறைவேற்ற 2003ம் ஆண்டு வரை காலக்கெடு நிர்ணயிக்கப்பட்டது. ஆனால், நீலகிரியில் திடக்கழிவு மேலாண்மை திட்டம் முழு அளவில் நடைமுறைக்கு வரவில்லை. ஊராட்சிகளில் இத்திட்டம் முழு அளவில் வெற்றியடைய பேரூராட்சி, நகராட்சிகளின் உதவி அவசியம்,'" என்றார்.

கோவை மாநகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்ட தொழில்நுட்ப குழு உறுப்பினர் பொறியாளர் பாஸ்கரன் பேசுகையில், ""ஊராட்சிப் பகுதிகளில் சேகரிக்கப்படும் குப்பைகளை அருகேயுள்ள நகராட்சி, பேரூராட்சிகள் மூலம் அப்புறப்படுத்துவன் மூலமே ஊராட்சிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டம் முழு வெற்றி பெறும்," என்றார்.

சி.பி.ஆர்., சுற்றுச்சூழல் கல்வி மையத்தின் இணை இயக்குனர் சுதாகரன் பேசுகையில், "ஊராட்சிகளுக்கு தேவையான குப்பை வண்டி, கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி கொடுப்பதன் மூலம் ஊராட்சிகளில் இத்திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்த முடியும்," என்றார். கோவை வேளாண்மை பல்கலைகழக பேராசிரியை சுகந்தி, குப்பைகளை கொண்டு மண்புழு உரம் தயாரிக்கும் விதம் குறித்து விளக்கினார்.கூட்டத்தில், குன்னூர் ஊராட்சி ஒன்றிய பி.டி.ஓ., ராஜூ முன்னிலை வகித்தார். பர்லியார் ஊராட்சி தலைவர் கலைச்செல்வன், வண்டிச்சோலை ஊராட்சி தலைவர் சதீஷ்குமார், குன்னூர் ஊராட்சி ஒன்றிய துணைத் தலைவர் காளிதாஸ் மற்றும் உறுப்பினர்கள், பேரட்டி ஊராட்சி தலைவர் ராஜேஸ்வரி, மேலூர் ஊராட்சி தலைவர் மணி உட்பட பலர் பங்கேற்றனர். கூட்ட ஏற்பாடுகளை "நெஸ்ட்' அறக்கட்டளையின் நிர்வாகி சிவதாஸ் உட்பட பலர் செய்திருந்தனர்.

**ஆர்வம் குறைவால் அதிருப்தி...**: உள்ளாட்சி அமைப்புகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்துவது குறித்து ஆலோசிப்பதற்காக நடத்தப்பட்ட இந்த முக்கியமான கூட்டத்தில் பெரும்பாலான

உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் பங்கேற்கவில்லை. காலை 10.00 மணிக்கு கூட்டம் துவங்குவதாக அறிவிக்கப்பட்டது; வண்டிச்சோலை ஊராட்சி, பர்லியார் ஊராட்சி உட்பட சில ஊராட்சி தலைவர்கள் மட்டும் வந்திருந்தனர். மதியம் 12.00 மணிக்கு மேல் தான் சில உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் வந்தனர். குன்னூர் நகராட்சி சார்பில் மக்கள் பிரதிநிதிகள், அதிகாரிகள் எவரும் பங்கெடுக்கவில்லை. இது நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களை சோர்வடைய செய்தது.

**உழவன் உணவகத்தில் விற்பனை செய்து வரும் பெண் விவசாயி**

நாமக்கல்: "உழவன் உணவகத்தில் விற்பனை செய்து வரும் பெண் விவசாயி, தனக்கு கிடைத்த வருமானத்தில் இருந்து 95,000 ரூபாய் மதிப்பில் வங்கி உதவியுடன் கார் வாங்கியுள்ளது மகிழ்ச்சியாக உள்ளது' என, கலெக்டர் சகாயம் கூறினார்.நாமக்கல் உழவர் சந்தையில் மதிப்பூட்டப்பட்ட பழச்சாறு விற்பனை துவக்க விழா நடந்தது. கலெக்டர் சகாயம் தலைமை வகித்து பேசியதாவது: கிராமப்புறங்களில் உள்ள விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்த காய்கறிகளுக்கு கட்டுபடியான விலை கிடைக்க வேண்டும் என்பதற்காகவும், நகர் பகுதிகளில் உள்ள மக்கள் தரமான காய்கறிகளை வாங்கி பயன்பெற வேண்டும் என்ற நோக்கிலும் உழவர் சந்தை ஏற்படுத்தப்பட்டது.

மாவட்டத்தில் நாமக்கல், திருச்செங்கோடு, ராசிபுரம், குமாரபாளையம், மோகனூர், ப.வேலூர் ஆகிய பகுதிகளில் உழவர் சந்தை ஏற்படுத்தப்பட்டுள்ளன. விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்த காய்கறிகள், பழங்கள், கீரை வகைகள் ஆகியவற்றை நேரடியாக உழவர் சந்தைக்கு கொண்டு வந்து விற்பனை செய்து வருகின்றனர். விவசாயிகள் பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையில், அவர்களுக்கு கூடுதலாக வருவாய் கிடைக்க வேண்டும் என்பதற்காக வேளாண் விளை பொருட்களின் மதிப்பை கூட்டி அதன் மூலம் உழவர்கள் வாழ்க்கை தரத்தை உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டு கடந்த ஆண்டு ஆகஸ்ட் 5ம் தேதி 30 வகையான மதிப்பூட்டப்பட்ட பொருட்கள் விற்பனை துவக்கப்பட்டது.

அன்றைய தினம் பிஸ்கட் மட்டும் ஒரு லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது. கிராமப்பகுதியில் உள்ள பழங்காலத்து உணவு வகைகளை உழவர் சந்தையில் விற்பனை செய்யும் வகையில் உழவன் உணவகம் நாமக்கல், திருச்செங்கோடு உழவர் சந்தையில் துவங்கப்பட்டது. இந்த உழவன் உணவகத்தின் மூலம் இதுவரை 37 லட்சம் ரூபாய் விற்பனை செய்யப்பட்டுள்ளது. அதேபோல் உழவர் சந்தையில் பழங்களை கொண்டு பழச்சாறு விற்பனை துவங்கப் பட்டுள்ளது. இதில் கொய்யா, மா, சப்போட்டா, வாழைத்தண்டு, கேரட், பீட்ரூட் போன்றவற்றில் இருந்து பழச்சாறு தயாரிக்கப்படும்.

தற்போது விவசாயி ராமசாமி என்பவர் தனது தோட்டத்தில் இயற்கையாக விளைந்த கொய்யா பழத்தில் இருந்து பழச்சாறு தயாரித்து முதல் விற்பனை செய்துள்ளார். 150 மி.லி., கொய்யா ஜூஸ் 5 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. அதற்காக ஆத்மா திட்டத்தின் மூலம் 4,000 ரூபாய், விவசாயியின் பங்கு தொகை 4,000 ரூபாய் என மொத்தம் 8,000 ரூபாய் மதிப்பில் இயந்திர சாதனம் வழங்கப்பட்டுள்ளது.

நாமக்கல் உழவன் உணவகம் துவங்கப்பட்ட நாளில் இருந்து எர்ணாபுரத்தை சேர்ந்த வெண்ணிலா என்ற விவசாயி, உழவர் சந்தைக்கு வருகை தந்து ராகி இட்லி, தோசை, தினை பாயசம், தினை உப்புமா, கம்பு தோசை தயாரித்து சுகாதாரமான முறையில் விற்பனை செய்து வருகிறார். அந்த விற்பனை மூலம் கிடைத்த லாபத்தில் 95 ஆயிரம் ரூபாய் மதிப்பில் பழைய கார் ஒன்று வங்கி உதவியுடன் வாங்கி உள்ளார். ஏர் ஓட்டும் கை, தற்போது கார் ஓட்டத் துவங்கியுள்ளது மகிழ்ச்சி அளிக்கிறது. உழவன் உணவகத்தை விவசாயிகள், நுகர்வோர் நன்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.இவ்வாறு அவர் பேசினார்.

**சம்பா நெல் அறுவடை**

கும்பகோணம்: கும்பகோணத்தில் இருந்து ரயில் மூலம் ஆயிரம் நெல் மூட்டைகள் திருநெல்வேலிக்கு அனுப்பப்பட்டது.கும்பகோணம், திருவிடைமருதூர், பாபநாசம் தாலுகாக்களில் கடந்த ஒரு வாரமாக சம்பா நெல் அறுவடை நடந்து வருகிறது. இதையடுத்து நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மூலம் விவசாயிகளிடம் இருந்து நெல் வாங்கப்பட்டு வருகிறது.இதுவரை கொள்முதல் செய்யப்பட்ட நெல் மூட்டைகள் சென்னை, மதுரை ஆகிய இடங்களில் உள்ள அரசு உணவு கிடங்குகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் நேற்று 2வது முறையாக திருநெல்வேலிக்கு ஆயிரம் மூட்டைகள் நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் உணவு கிடங்குக்கு அனுப்பி வைக்கப்பட்டது. சுமார் 20 ரயில் வேகன்கள் மூலம் தலா 50 கிலோ எடை கொண்ட நெல் மூட்டைகள் அனுப்பப்பட்டது. சி.ஆர்.1009, ஆடுதுறை 36 போன்ற நெல் ரகங்கள் அனுப்பப்பட்டுள்ளது.

**உர விற்பனை நிலையங்களுக்கு வேளாண் அதிகாரி எச்சரிக்கை**

தேனி: உரம் இருப்பு, விலைப்பட்டியல் பராமரிக்காத விற்பனை நிலையங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என வேளாண் இணை இயக்குனர் நடராஜன் தெரிவித்துள்ளார்.

தேனி மாவட்டத்திலுள்ள உர விற்பனை நிலையங்களில் வேளாண்மை துறை அலுவலர்கள் ஆய்வு நடத்தினர். குறைபாடுகள் கண்டறியப்பட்ட சின்னமனூர் வட்டாரத்தில் இரண், கம்பம் மற்றும் கடமலைக்குண்டு வட்டாரங்களில் தலா ஒன்று என உரவிற்பனை நிலையங்களின் உர லைசென்ஸ் பத்து நாட்கள் முதல் ஒரு மாதத்திற்கு ரத்து செய்யப்பட்டுள்ளது. வேளாண்மை இணை இயக்குனர் நடராஜன் கூறுகையில், உர விற்பனை நிலையங்களில் இருப்பு, விலை பட்டியல் விபரம் வைக்கப்பட வேண்டும். ஒப்புதல் பெறப்படாத உரங்களை விற்பனை செய்யக்கூடாது. உர இருப்பு பதிவேடுகள் உரிய படிவத்தில்பராமரித்தல் வேண்டும். முறைகேடும் மற்றும் புகார்கள் எழும் நிலையங்களில் சோதனை நடத்தி, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

**விவசாயிகளுக்கு புத்தூட்ட பயிற்சி**

பெரியகுளம்: வடுகபட்டி வேளாண்மை உதவி இயக் குனர் அலுவலகத்தில் விதை கிராம திட்டத்தின் மூலம் நெல் சாகுபடி விவசாயிகளுக்கு புத்தூட்ட பயிற்சி அளிக்கப்பட்டது. வேளாண்மை உதவி இயக்குனர் பெரியசாமி தலைமை வகித்தார். பெரியகுளம் ஒன்றிய தலைவர் பாண்டியன் முன்னிலை வகித்தார். விதை சான்றழிப்புத்துறை அலுவலர் ரவி மேற்பார்வையில், விவசாயிகளுக்கு தரமான நெல்விதை உற்பத்தி, அறுவடை தொழில்நுட்பம், விதைதரம் பராமரித்தல், உலர்த்துதல், சுத்திகரிப்பு, சேமிப்பு, ஈரப்பதம், சேமிப்பு கிடங்கு பராமரிப்பு, நெல் அறுவடைக்கு பின் கடைப்பிடிக்க வேண் டிய தொழில் நுட்பங்கள் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது.

**தூத்துக்குடி மாவட்டதொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மேம்பாட்டிற்கு ரூ. 26 கோடி**

தூத்துக்குடி: தூத்துக்குடி மாவட்டத்தில் வைத்தியநாதன் குழு பரிந்துரைப்படி தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களுக்கு குறுகிய கால கடன் சீரமைப்பு நிதி 26 கோடி வழங்கப்பட்டுள்ளது.

தூத்துக்குடி மாவட்டத்தில் மொத்தம் 152 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் செயல்பட்டு வருகிறது. இதில் பல சங்கங்களின் நிலை மோசமாக இருந்து வந்தது. தமிழக அரசு இந்த கடன் சங்கங்கள் அனைத்தையும் மீண்டும் புத்துயிர் பெறுவதற்கு வேண்டிய பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இதன் ஒரு கட்டமாக தொடக்க கூட்டுறவு வளர்ச்சி நிதியில் இருந்து தலா 20 லட்சம் வரை 88 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்திற்கு வழங்கப்பட்டது. இந்த தொகையில் நகை கடன் மட்டும் அந்த சங்கங்கள் வழங்கி கொள்ள வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் கிடைக்கும் வட்டியின் மூலம் கூட்டுறவு கடன் சங்க பணியாளர்கள் சம்பளத்தை வழங்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் பிறகு இந்த சங்கங்கள் முன்னேற்றத்திற்கு வர துவங்கி இருப்பதாக தூத்துக்குடி மாவட்ட கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் முருகன் தெரிவித்தார்.

மேலும் அவர் கூறியதாவது; தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களின் மேம்பாடு குறித்து வைத்தியநாதன் குழு அளித்த பரிந்துரையின் அடிப்படையில் தூத்துக்குடி மாவட்டத்திற்கு மொத்தம் 26 கோடியே 20 லட்ச ரூபாய் குறுகிய கால கடன் சீரமைப்பு நிதி அனுமதித்தது. இந்த நிதி இம்மாவட்டத்தில் உள்ள 135 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இவற்றின் மூலம் இம்மாவட்டத்தில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மீண்டும் நல்ல நிலையை அடையும் நிலை ஏற்பட்டிருக்கிறது. இவ்வாறு முருகன் தெரிவித்தார்.

**செம்மைநெல் சாகுபடி வயலில் அறுவடை விழா**

திருவெறும்பூர்: திருவெறும்பூர் வேளாண் விரிவாக்க மையம் சார்பில் எல்லக்குடி கிராமத்தில் விவசாயி செபஸ்தியான் என்பவரின் வயலில் செம்மைநெல் சாகுபடி வயல் தின அறுவடை விழா நடந்தது. விழாவிற்கு பஞ்., தலைவர் தமிழ்செல்வன் தலைமை வகித்தார். மாவட்ட வேளாண் இணை இயக்குனர் பொறுப்பு ராம்குமார் முன்னிலை வகித்தார். வேளாண் அலுவலர் ராஜேந்திரன் வரவேற்றார். வயலில் விளைவிக்கப்பட்டிருந்த ஆந்திரா பொன்னி பி.பி.டி எண்: 5204 என்ற ரக நெல்லை வேளாண் அலுவலர் அறுவடை செய்தார். "செம்மை நெல் சாகுபடியால் ஏற்படும் வருமானம்' குறித்து இணை இயக்குனர் ராம்குமார் பேசினார். "ஒரு ஹெக்டேருக்கு ஒரு லட்ச ரூபாய் வருமானம் பெறும் முறை' குறித்து உதவி இயக்குனர் ரவி பேசினார். விவசாயி செபஸ்தியான் பேசியதாவது: பயிரை நடவு செய்த போது ஏற்பட்ட களைகளை கண்டு முதலில் பயந்தேன். பின் கோனோவிடர் களையெடுப்பு கருவி கிடைத்ததும் களை எடுப்பது எளிதானது. மூன்று முதல் நான்கு முறை களை எடுப்பது செய்யவும் தூர் நன்கு வெடித்து ஒரு குத்துக்கு 45 முதல் 65 தூர்கள் வெடித்து ஏக்கருக்கு மூன்றாயிரம் டவுன் அளவிற்கு மகசூல் கிடைத்துள்ளது. இதனை விவசாயிகள் அனைவரும் செய்தால் நன்மை கிடைக்கும் என்றார். வேளாண் அலுவலர் ஹாராணி நன்றி கூறினார்.
விழா ஏற்பாடுகளை உதவி அலுவலர்கள் அமல்ராஜ், ஜனார்த்தனம், சின்னபாண்டி, திருக்குமரன், இசபெல்லா, சரவணன் ஆகியோர் செய்திருந்தனர்.

**நீர் வள நில வள திட்டத்தில் கோனோவீடர் செயல் விளக்கம்**

தென்காசி: வாசுதேவநல்லூர் பகுதியில் நீர்வள, நில வள திட்டத்தின் கீழ் கோனோவீடர் செயல் விளக்கம் செய்து காட்டப்பட்டது. வாசுதேவநல்லூர் அருகே கூடலூரில் நீர்வள, நிலவள திட்டத்தில் கலிங்கலாறு உபவடிநில பகுதியில் செம்மை நெல் சாகுபடி செய்துள்ள வயல்களில் கோனோவீடர் கருவி கொண்டு களை எடுக்கும் செயல் விளக்கம் செய்து காட்டப்பட்டது. வேளாண்மை அலுவலர் ராமசாமி தலைமை வகித்து பேசும் போது, நெல் நடவின் போது ஒற்றை நாற்று சதுர முறையில் நடவு செய்ய வேண்டும். எந்த பாதிப்பும் இன்றி பயிர் நன்றாக செழித்து வளரும். அதிக அளவில் தூர் கட்டும். செம்மை நெல் சாகுபடி பயிரில் கோனோவீடர் கொண்டு களை எடுக்க வேண்டும் என்றார்.

விவசாயி ராதாகிருஷ்ணன் முன்னிலை வகித்தார். துணை வேளாண்மை அலுவலர் ரவிச்சந்திரன் வரவேற்றார். விவசாயிகளின் சந்தேகங்களுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது. உதவி வேளாண்மை அலுவலர் செல்லையா நன்றி கூறினார். ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர்கள் பால்ராஜ், சம்சுதீன், அண்ணாதுரை செய்திருந்தனர்.

**மண்புழு உரம் தாயாரிக்கும் பயிற்சி**

தென்காசி: கடையநல்லூர் கிருஷ்ணாபுரத்தில் மண்புழு உரம் தயாரிப்பு பயிற்சி முகாம் நடந்தது. கடையநல்லூர் கிருஷ்ணாபுரத்தில் நடந்த மண்புழு உரம் தயாரிப்பு பயிற்சி முகாமிற்கு வேளாண்மை உதவி இயக்குநர் உமர்கத்தா தலைமை வகித்து பேசும் போது, மண்புழு உரம் இடுவதால் ஏற்படும் நன்மைகள் குறித்து விளக்கினார். விதைச்சான்று உதவி இயக்குநர் பிரம்மநாயகம், விதைச்சான்று அலுவலர் அசோகன் பயிற்சி அளித்தனர். ராமதிலகம் மண்புழு உயர் தயார் செய்யும் முறை குறித்து விளக்கம் அளித்தார். ஏற்பாடுகளை வேளாண்மை

அலுவலர் முருகையா, துணை வேளாண்மை அலுவலர் சுப்பிரமணியன் மற்றும் உதவி வேளாண்மை அலுவலர்கள் செய்திருந்தனர்.

**பயறு வகை பயிர் உற்பத்தி தொழில்நுட்ப பயிற்சி முகாம்**

கீழ்பென்னாத்தூர்:கீழ்பென்னாத்தூர் வட்டாரத்தில் பயறு வகை பயிர்களில் உற்பத்தி தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சி முகாம் நடந்தது.சிறுநாத்தூர், சோ.நம்மியந்தல், நெய்வாநத்தம், ந.கெங்கம்பட்டு ஆகிய கிராமங்களில் இருந்து, தலா 50 விவசாயிகள் வீதம் மொத்தம் 200 பேருக்கு உளுந்து, பாசிப்பயிறு, துவரை, காராமணி ஆகிய பயறு வகைகளில் உற்பத்தி தொழில் நுட்பங்கள், விதைத்தேர்வு, விதை உற்பத்தி முறைகள், விதைச்சான்று நடைமுறைகள், மானியம் குறித்த பயிற்சி அளிக்கப்பட்டது.

முகாமில், கீழ்பென்னாத்தூர் வேளாண்மை உதவி இயக்குநர் ரமணன், விதை சான்று அலுவலர் செல்வராஜ், வேளாண்மை அலுவலர் முத்துராம் ஆகியோர் பயறு வகை பயிர்களில் உற்பத்தி தொழில் நுட் பங்கள், பயிர்களில் பூச்சிநோய் தாக்குதல் மற்றும் அவற்றை கட்டுப்படுத்துதல் முறைகள் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது.அந்தந்த பகுதியை சேர்ந்த உதவி வேளாண்மை அலுவலர்கள் மூலம் விவசாயிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டது.

**செம்மை நெல் சாகுபடி செயல்விளக்க முகாம்**

வந்தவாசி:தெள்ளாறு அடுத்த தென்வணக்கம்பாடி கிராமத்தில் நெல் சாகுபடியில் உயர் தொழில்நுட்பங்கள் மற்றும் செம்மை நெல் சாகுபடி குறித்த செயல்விளக்கம் நடந்தது.வந்தவாசி, தெள்ளாறு வட்டாரங்களில் வராக நதி பாசன திட்டம் மூலம் 3 ஆயிரத்து 400 ஏக்கரில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது.

நெல்லில் உயர் மகசூல் பெற தமிழக அரசு செம்மை நெல் சாகுபடி முறையை அறிமுகம் செய்துள்ளது.ஆனால் வந்தவாசி, தெள்ளாறு பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் வேளாண் துறையின் ஆலோசனை பெறாமல் அவரவர் தாங்களாகவே ஒரு ரக நெல்லை தேர்வு செய்து பயிர் செய்கின்றனர். எனவே, அதிக மகசூல் பெற முடியாமல் மிக, மிக குறைந்த அளவு மகசூலையே பெற்று வந்தனர்.

எனவே, நெல் சாகுபடியில் உள்ள உயர் தொழில்நுட்பங்கள் மற்றும் செம்மை நெல் சாகுபடி குறித்து விவசாயிகளிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையிலான சிறப்பு முகாம் நடந்தது. வேளாண் உதவி இயக்குனர் செல்வராஜ் சிறப்பு அழைப்பாளராக கலந்துகொண்டு, "நிலத்தில் கரிமச்சத்து அளவை அதிகரிக்க இயற்கை உரங்கள், பயிர்க்கழிவுகள், பசுந்தாள் உரங்களை இடவேண்டும்' என்பது உட்பட பல அறிவுரைகளை வழங்கினார்.இதில், வேளாண் உதவி வளர்ச்சி அலுவலர் மயில்சாமி உட்பட ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**செம்மை நெல் சாகுபடியில் ஜே-18** பிப்ரவரி 02,2010,14:48 IST



ஜே-18 நெல்லினை ஆகஸ்ட் 3ம் தேதி (2009) நாற்றுவிட்டு, ஜனவரி (2010) 11, 12 தேதிகளில் அறுவடை செய்துள்ளார், திருவண்ணாமலையைச் சேர்ந்த முற்போக்கு விவசாயி என்.பத்ரிநாராயணன் (106, காமாட்சி அம்மன் கோயில் தெரு, திருவண்ணாமலை-606 601, 04175-225 908, 94421 31410) முற்போக்கு விவசாயி கடந்த 10-12 வருடங்களாக ஜே-18 நெல்லினை இயற்கை முறையில் தொடர்ந்து சாகுபடி செய்து வருகிறார். இவர் நடப்பு சம்பா பருவத்தில் (2009-2010) ஜே-18 நெல்லினை செம்மை நெல் சாகுபடியில் பயிர் செய்து 1.20 ஏக்கர் பரப்பில் 35 மூடைகள் (மூடை 75 கிலோ) மகசூல் எடுத்துள்ளதோடு 4,000 ரூபாய் மதிப்புள்ள வைக்கோலினையும் பெற்றுள்ளார்.

ஒரு ஏக்கர் சாகுபடிக்கு 3 கிலோ விதை வீதம் உபயோகித்துள்ளார். 3 கிலோ விதையினை பிரத்யேகமாகத் தயாரிக்கப்பட்ட ஒரு சென்ட் மேட்டு நாற்றங்காலில் விதைக்கிறார். வயலில் 14 நாட்கள் வயதுடைய இளம் நாற்றுக்களை பறித்து 30 செ.மீ. து 30 செ.மீ. இடைவெளியில் நட்டார். இவர் நாற்றங்காலுக்கு மக்கிய சாணி உரம், மண்புழு உரம் இட்டார். விதையினை 100 கிராம் அசோஸ்பைரில்லம், 100 கிராம் பாஸ்போ பாக்டீரியா, 100 கிராம் சூடோமோனாஸ் புளாரசன்ஸ், 100 கிராம் டிரைக்கோடெர்மா விரிடி இவைகளை தண்ணீரில் கலந்து இந்தக் கலவையில் நெல் விதையினை ஊறவைத்து விதைத்தார். நடவு வயலில் பல தானியங்களை விதைத்து (உளுந்து, காராமணி, மொச்சை, சோயா, தக்கைப்பூண்டு முதலியன) 45 நாட்களுக்குப் பிறகு வயலில் முளைத்த செடிகளை பூமியில் மடக்கி உழுதார். நடவு வயலுக்கு ஒன்றரை டன் மண்புழு எருவினை அடியுரமாகவும், மேலுரமாகவும் இட்டார். வயலில் செழிப்பாக வளர்ந்த பயிருக்கு ஒரு முறை பஞ்சகவ்யா தெளித்தார். வளர்ந்த பயிரில் மூன்று முறை கோனாவீடரை உபயோகித்தார். இந்த செயல் களைச்செடிகளை பூமியில் மடக்கி உழச் செய்தது. நெல் பயிரின் வேர்கள் செழிப்பாக கொத்தாக வளர்ந்தன. வயலில் பல இடங்களில் பறவைகள் உட்கார குச்சிகள் நட்டார். பறவைகள் குச்சிகள் மேல் உட்கார்ந்து பயிரில் பூச்சிகள் தென்பட்டவுடன் உடனே பறந்துசென்று பூச்சிகளை பிடித்துத் தின்கின்றன. விவசாயி குருத்துப்புழு, இலை சுருட்டுப் புழு இவைகளின் தாய் அந்துப் பூச்சிகளை (ஆயிரக்கணக்கில் முட்டைகள் இட்டு இனத்தைப் பெருக்கக்கூடியவை) அழிக்க இனக்கவர்ச்சி பொறி வைக்கிறார். மேலும் மஞ்சள் டின்களில் எண்ணெயை பூசி வயலில் குச்சி நட்டு அதன் மேல் கவிழ்த்து வைக்கிறார். இனக்கவர்ச்சி பொறி ""பெஸ்ட் கன்ட்ரோல் ஆப் இந்தியா'' எனும் கம்பெனியில் கிடைக்கின்றது. டால்டா டின்களை வயலில் குச்சி நட்டு அதன்மேல் கவிழ்த்துவிட்டால் அந்துப் பூச்சிகள் மஞ்சள் கலரால் கவரப்பட்டு டின்களின் மேல் ஒட்டிக்கொண்டு மாண்டுவிடுகின்றன. இனக்கவர்ச்சிப் பொறி மற்றும் மஞ்சள் கலர் டின்கள் வைப்பது குருத்துப்பூச்சி மற்றும் இலை சுருட்டுப்புழு பாதிப்பினை கட்டுக்குள் கொண்டு வருகின்றன. விவசாயி இம்முறைகளை கையாண்டு விஷ மருந்துகள் உபயோகிப்பதை தவிர்க்கிறார். பயிர் வளரும் காலத்தில் இவரது பயிரில் கீழ்க்கண்ட அம்சங்கள் தெளிவாக தெரிந்தன.

* ஜே -18 பயிர் ஆறரை அடி உயரம் (195 செ.மீ.) வளர்ந்தது. இருப்பினும் பயிர் கீழே சாயவில்லை.

* ஒரு குத்தில் 30-35 தூர்கள் பிடித்திருந்தன. ஒரு கதிரில் 250 நெல்மணிகள் இருந்தன. பயிர் வளர்ச்சி காலத்தில் பயிர் பாதுகாப்பிற்கு அதிக செலவு செய்யவில்லை. பயிர் பாதுகாப்பிற்கு இயற்கை முறை கடைபிடிக்கப்பட்டது.

* 1.20 ஏக்கர் பரப்பில் மகசூல் 35 மூடைகள் (மூடை 75 கிலோ) கிடைத்தது. இதோடு 4000 ரூபாய் மதிப்புள்ள வைக்கோலும் கிடைத்தது. முன்னதாக முற்போக்கு விவசாயியின் ஜே-18 பயிரினை மாவட்ட கலெக்டர், விவசாய அதிகாரிகள் மற்றும் விவசாயிகள் நேரில் கண்டு ஆச்சர்யம் அடைந்தனர்.

பொருளாதாரம்: விவசாயி தான் விளைவித்துள்ள நெல்லினை அரிசியாக்கி விற்க திட்டமிட்டுள்ளார். இவர் கூறியது 35 மூடை நெல்லினை புழுங்கல் அரிசியாக மாற்றுவது. அப்போது 15 குவின்டால் அரிசி கிடைக்கும். இதனை கிலோ 50 ரூபாய்க்கு விற்றால் கிடைக்கும் தொகை 75 ஆயிரம் ரூபாய். வைக்கோலின் மதிப்பு 4000 ரூபாய். மொத்தவரவு 79 ஆயிரம் ரூபாய். விவசாயிக்கு 1.20 ஏக்கரில் செம்மை நெல் சாகுபடி செய்ததில் செலவு 25 ஆயிரம் ரூபாய் ஆனதாக சொல்கிறார். செலவு அதிகம் ஆனாலும் 1.20 ஏக்கரில் 54 ஆயிரம் ரூபாய் லாபம் கிடைக்கும் என்கிறார்.

நெல் சாகுபடியில் அதிக மகசூலினை எடுக்க அதிக அளவு ரசாயன உரங்களை கண்டிப்பாக இடவேண்டும் என்ற சித்தாந்தத்தை இயற்கை முறை சாகுபடி மாற்றிவிட்டது. நெல் விவசாயிகள் இனி பயமில்லாமல் ஜே-18 நெல்லினை இயற்கை முறையில் சாகுபடி செய்து அதிகமான மகசூலினையும் கணிசமான லாபத்தினையும் எடுக்க இயலும்.

-எஸ்.எஸ்.நாகராஜன்.

**நவீன தொழில்நுட்பம்** பிப்ரவரி 02,2010,14:51 IST



செம்மை நெல் சாகுபடிக்கான விசைக்களை எடுப்பான்: சமீபத்தில் தமிழ்நாடு விவசாய பல்கலைக்கழகம் விவசாயிகள் பயன் பெறும் வகையில் வெளியிட்டுள்ளது.

இக்கருவியின் சிறப்பியல்புகள்: செம்மைநெல் சாகுபடி நெற்பயிரில் 22 முதல் 25செ.மீ. இடைவெளியில் நடப்பட்ட பயிர்களில் களையெடுக்க ஏற்றது. தானே இயங்கும் தன்மையுள்ளதால் களை எடுப்பானை தள்ளவோ, இழுக்கவோ

தேவையில்லை. குறைவான எடையில் (17 கிலோ) இயங்கும்பொழுது சேற்றில் புதைவதில்லை. இரண்டு அல்லது மூன்று வரிசைகளில் ஒரே நேரத்தில் களை எடுக்கலாம். ஒரே நபரினால் எளிதாக இயக்கவும் வரிசை மாற்றவும் முடியும். நெற்பயிருக்கு அதிக சேதாரமின்றி களைகள் 3 முதல் 4 செ.மீ. ஆழத்தில் முழுமையாக அமுக்கப்படுகின்றன.

செயல்திறன்: நாள் ஒன்றுக்கு 0.75 முதல் 1.00 எக்டர் வரை. இயக்குவான்: 1.5 குதிரைத்திறன் இன்ஜினால் சுழலும் இரண்டு விசைக்கருவிகள். கருவியின் விலை 15,000 ரூபாய்.

**புதியபண்ணைக்கருவிகள்**

இரட்டை வரிசையில் துல்லியமாக அங்கக மற்றும் ரசாயன உரம் இடும் கருவி. இக்கருவியின் சிறப்பியல்புகள்: வரிசைப் பயிரின் வேர்ப் பகுதியில் உரங்களை சரியான அளவில் இட ஏதுவானது. பயிர் இடைவெளிக்கு ஏற்ற வகையில் உளிக்கலப்பை முனைகளை மாற்றி அமைக்கும் வசதி, அங்கக மற்றும் ரசாயன உரங்களை ஒரே சமயத்தில் துல்லியமாக இட ஏற்றது.

செயல்திறன்: நாள் ஒன்றுக்கு ஒரு எக்டர். கருவியின் விலை 50,000 ரூபாய். மேலும் விபரங்களுக்கு பேராசிரியர் மற்றும் தலைவர், பண்ணை இயந்திரவியல் துறை, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகம், கோயம்புத்தூர் -641 003.

**சின்னச்சின்ன செய்திகள்** பிப்ரவரி 02,2010,14:52 IST





புதிய குதிரைவாலி ரகம் கோ (கேவி)2: சிறப்பியல்புகள்: உயர் விளைச் சல், குறுகிய வயது, வறட்சியைத் தாங்கும் தன்மை, சாயாத இயல்பு, மதிப்பூட்டப்பட்ட பசுந்தாள்கள் செய்ய மிகவும் ஏற்றது. உருவாக்கம்: இ.எப்.70 என்றி கருவூலத்திலிருந்து தனி வழி தேர்வு. வயது: 95 நாட்கள். பருவம்: ஆடி மற்றும் புரட்டாசி பட்டம்.

மகசூல்: 2114 கிலோ/ எக்டர் (கோ.1, கே.1 மற்றும் வி.எல்.29 ரகங்களைவிட முறையே 23.2, 10.6 மற்றும் 5.9 சதம் கூடுதல் மகசூல். அதிகபட்ச மகசூல்: 3095 கிலோ/ எக்டர். பயிரிட உகந்த மாவட்டங்கள்: மதுரை, ராமநாதபுரம்,

தூத்துக்குடி மற்றும் விருதுநகர். மேலும் விபரங்களுக்கு இயக்குனர், பயிர் மரபியல் துறை, தமிழ்நாடு விவசாய பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்-641 003.

புதிய நெல் ரகம் - பரமக்குடி (ஆர்)4: சிறப்பியல்புகள்: நடுத்தர உயரம் மற்றும் சாயாத தன்மை. வறட்சியைத் தாங்கும் திறன். நீண்ட சன்னமான வெள்ளை அரிசி. அதிக அரவைத்திறன் (62.1 சதம்). குறுகிய வயது.

உருவாக்கம்: பந்தான் 10/ ஐ.இ.டி. 991/ லிருந்து தனி வழித்தேர்வு. வயது: 100-105 நாட்கள். பருவம்: சம்பா (செப்டம்பர் - அக்டோபர்) மகசூல்: 3.7 டன் / எக்டர் (பி.எம்.கே.ஆர். ஐவிட 14.7 சதம் கூடுதல் மகசூல்). பயிரிட உகந்த மாவட்டங்கள்: ராமநாதபுரம், சிவகங்கை.

கிசான் கால் சென்டர்: விவசாயிகள் கேள்விகளுக்கு இலவசமாக பதில் பெற கிசான் சென்டரை லேண்ட்லைன் மற்றும் மொபைல் மூலம் கட்டணம் இல்லாத தொலைபேசி எண்ணுக்கு 1800-180-1551 தொடர்பு கொள்ளவும்.

விவசாய பொருட்காட்சி: காந்தி மியூசியம் மைதானம், மதுரை-4-7 பிப்ரவரி 2010. வேளாண் உபகரணங்கள், வேளாண் பொறியியல் தொழில்நுட்பம், டிராக்டர்கள், பம்புகள், சொட்டுநீர் பாசனம், மண்வளம், இயற்கை மற்றும் செயற்கை விவசாய முறைகள், பால் உற்பத்தி, அரிசி ஆலைக்கான இயந்திரங்கள், அரிசி உற்பத்தி, தானியம் கலர் பிரித்தல், உயிரியல் தொழில்நுட்பம், நெட்டை குட்டை தென்னங்கன்றுகள், கால்நடை வளர்ப்பு, பட்டுப்பூச்சி வளர்ப்பு உரம், பூச்சி மருந்துகள், தோட்டக்கலை, விதை தானியம் உற்பத்தி, புத்தகங்கள், விவசாய கடன் வழங்கும் வங்கிகள், குளிர்பதன கிடங்குகள் மற்றும் பல அரிய கண்டுபிடிப்புகள். தொடர்புக்கு: சென்னை டிரேட் ஈவன்ட்ஸ், 218, ராஜரத்தினம் வீதி, 2வது மாடி, ஏ.ஜி. ஆஸ்பத்திரி அருகில், தாம்பரம் மேற்கு, சென்னை-45. 97899 86422/ 044-2226 4687.

-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.

தினகரன்

### பி.டி.கத்தரிக்காய் 10ம் தேதி இறுதி முடிவு

பதிவு செய்த நாள் 2/3/2010 12:20:54 AM



ஜம்மு : மரபணு மாற்றம் செய்யப்பட்ட பி.டி. கத்தரிக்காய் சாகுபடியை வர்த்தக ரீதியில் நம் நாட்டில் அனுமதிப்பதா, வேண்டாமா என்பது பற்றி மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ் நடத்தி வந்த ஆலோசனைக் கூட்டங்கள் முடிவடைந்து விட்டன. கொல்கத்தா, புவனேசுவரம், ஐதராபாத், நாக்பூர், அகமதாபாத், சண்டிகர் போன்ற நகரங்களில் அவர் நடத்திய கூட்டங்களில் பி.டி. கத்தரிக்காயை இந்திய சந்தைகளில் அறிமுகப்படுத்த கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

சர்வதேச பசுமை நில நாள் நேற்று கடைப்பிடிக்கப்பட்டதையொட்டி, ஜம்முவில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் மத்திய அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ் கலந்து கொண்டார்.

அங்கு அவர் நிருபர்களிடம் கூறுகையில், பி.டி. கத்தரிக்காயை வர்த்தக ரீதியில் உற்பத்தி செய்ய அனுமதிக்கலாமா? வேண்டாமா? என்பது பற்றிய ஆலோசனை முடிந்து விட்டது. இது பற்றிய இறுதி முடிவு 10ம் தேதி எடுக்கப்படும் என்றார்.

## 10 இடங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் கலெக்டர் தகவல்

பதிவு செய்த நாள் 2/3/2010 1:00:14 AM

ராமநாதபுரம் : ராமநாதபுரம் மாவட்டத்தில் 10 இடங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் இன்று முதல் செயல்படும் என கலெக்டர் ஹரிகரன் தெரிவித்தார்.

ராமநாதபுரம் மாவட்டத்தில் 2009&10ம் ஆண்டுக் கான காரிபருவ நெல் கொள் முதல் செய்ய தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகத்தின் நேரடி கொள்முதல் நிலையம் திறக்கப்படுகிறது. ராமநாதபுரம், திருவாடா னை, பரமக்குடி, கமுதக்குடி, கமுதி, முதுகுளத்து£ர், திருஉத்திரகோசமங்கை, பார்த்திபனு£ர், சனவேலி, செல்வநாயகபுரம் ஆகிய இடங் களில் விவசாயிகளுக்கான நெல்கொள்முதல் இன்று முதல்நடைபெறும்.

முதல்ரக நெல் வகைகளுக்கு குவிண்டாலுக்கு ரூ.ஆயிரத்து 100, மோட்டா ரகம் நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.ஆயிரத்து 50ம் வழங்கப்படும். கொள்முதல் நிலையங்களில் 17 சதவீதம் ஈரப்பதத்துடன்அரசால் அனுமதிக்கப்பட்டுள்ள நெல் மட்டும் பெற்றுக்கொள்ளப்படும். கமுதி, பரமக்குடி, திருவாடானை, ராமநாதபுரம் கூட்டுறவு சங்கங் களிலும், தொருவளூர் திருவரங்கம் தொடக்க வேளாண் விற்பனை சங்கங்களிலும் கொள்முதல் செய்யப்படும் என தெரிவித்துள்ளார்.

## இழப்பீடு கேட்டு விவசாயிகள் ஆர்ப்பாட்டம்

பதிவு செய்த நாள் 2/3/2010 12:59:24 AM

ராமநாதபுரம் : ராமநாதபுரம் தாலுகா அலுவலகம் முன் தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடந்தது.

தாலுகா செயலாளர் பூமிநாதன் தலைமை வகித்தார். மாவட்டச் செயலாளர் முத்துராமு, மார்க்சிஸ்ட் கட்சி தாலுகா செயலாளர் ராஜ்குமார் முன்னிலை வகித்தனர். மாநில தலைவர் பாலகிருஷ்ணன் பேசுகையில், ``ராமநாதபுரம் மாவட்டத்தில் நெற்பழ நோயால் நெற்பயிர்கள் கடும் பாதிப்பிற்கு ஆளாகியுள்ளன. பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.15 ஆயிரம் வீதம் நஷ்டஈடு வழங்க வேண்டும். நோய் பரவாமல் தடுக்க உரிய நடவடிக்கைகளை வேளாண் துறையினர் எடுக்க வேண்டும்" என்றார். விவசாயத் தொழிலாளர் சங்க மாவட்டச் செயலாளர் கலையரசன், தாலுகா தலைவர் குப்புராமு உட்பட பலர் கலந்து கொண்டனர்

## கால்நடை பாதுகாப்பு திட்ட முகாம்

பதிவு செய்த நாள் 2/3/2010 1:02:40 AM

சிவகங்கை : தமிழக அரசின் சிறப்பு கால்நடை பாதுகாப்பு திட்ட முகாம் நாடாமங்கலம் கிராமத்தில் நடைபெற்றது. முகாமில் மாடுகள், ஆடுகளுக்கு தடுப்பூசி, சினைஊசி போடப்பட்டன. இதுதவிர கோழிகளுக்கு தடுப்பூசியும், குடற்புழு நீக்கம் சிகிச்சையும் அளிக்கப்பட்டன. பெரியகண்ணனூர் கால்நடை உதவி மருத்துவர் ராஜேஷ் சிகிச்சை அளித்தார். சிறந்த கால்நடைகளுக்கு ஊராட்சி தலைவர் துரைப்பாண்டி பரிசு வழங்கினார். இம்முகாம் மூலம்

நாடாமங்கலம், உதாரப்புலி, மாடக்கோட்டை கிராமங்களை சேர்ந்த கால்நடைகள் பயனடைந்தன. கால்நடை ஆய்வாளர் மஞ்சுளா, கால்நடை பராமரிப்பு உதவியாளர் நாகராஜன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### ஈரோடு வேளாண் உற்பத்தியாளர் சங்கத்தில் தேங்காய் வரத்து குறைந்தது

பதிவு செய்த நாள் 2/3/2010 3:00:38 AM

சேலம்: ஈரோடு கருங்கல்பாளையம் கூட்டுறவு விற்பனையாளர் சங்கத்தில் செவ்வாய் தோறும் தேங்காய் ஏலம் விடப்படுகிறது. இதில் தேங்காய் வரத்து நாளுக்கு நாள் குறைந்து வருகிறது.

ஈரோடு கருங்கல்பாளையம் காவேரி ரோட்டில் உள்ள வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் மஞ்சள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இங்கு கடந்த ஆறு மாதங்களுக்கு முன்னர் செவ்வாய்க் கிழமைகளில் தேங்காய் ஏலம் துவங்கியது. இதையடுத்து சேலம், ஈரோடு சுற்றுவட்டப் பகுதிகளில் உள்ள கிராமங்களில் இருந்து தேங்காய் விற்பனைக்கு வந்தது. உள்நாட்டுத் தேவை மற்றும் வெளிநாட்டுத் தேவைக்காக வியாபாரிகள் தேங்காய் ஏலத்தன்று இங்கு வருகின்றனர். தற்பொழுது தேங்காய் விலை ஓரளவுக்கு உயர்ந்துள்ளது. தேங்காய் எண்ணெய் எடுப்பதற்கு முற்றிய தேங்காய் விற்பனை செய்யப்படுகிறது. மேலும் தேங்காய்க்கான தேவை அதிகரித்திருப்பதால் நேற்று இங்கு ரூ.6 வரை தேங்காய் ஏலம் எடுக்கப்பட்டது. இது குறித்து தனி அலுவலர் ஜெகநாதன் கூறியிருப்பதாவது:

இங்கு தேங்காய் ஏலம் துவங்கிய புதிதில் 5 ஆயிரம் காய்கள் வரை விற்பனைக்கு வந்தது. நாளடைவில் விவசாயிகள் மத்தியில் ஆர்வம் குறைந்து விற்பனைக்கு வரும் தேங்கா யின் அளவு குறைந்தது. ஆனால் வியாபாரிகள் எப்போதும் போல் வருவ தால் தேங்காய்க்கான தேவை அதிகரித்துள்ளது. இந்த வாய்ப்பினை சேலம் மற்றும் ஈரோடு மாவட்ட விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### பயறு சாகுபடி விவசாயிகளுக்குமான்ய விலையில் பாசன கருவி விநியோகம்

பதிவு செய்த நாள் 2/3/2010 2:54:25 AM

சேலம், : பயறு வகை பயிர்கள் சாகுபடிக்கு மான்ய விலையில் பாசன கருவி விநியோகம் செய்யப்பட்டு வருவதாக சேந்தமங்கலம் வேளாண் உதவி இயக்குநர் வருதராஜூ தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து, அவர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது:

இறவையில் அதிக லாபம் பெற பயறு வகை பயிர்களான உளுந்து, பாசிப்பயறு, துவரை ஆகியவற்றை சாகுபடி செய்யலாம். உளுந்து ரகங்களில் டி.எம்.வி.1 மற்றும் மஞ்சள் தேமல் நோய்களை தாங்கும் திறன் படைத்த ரகங்களான வம்பன் 1 முதல் வம்பன் 5 வரை பயிரிட ஏற்றதாகும். பாப்பயறு ரகங்களான கே.எம்.2, கோ.6, வம்பன் 2,3 மற்றும் துவரையில் மிக குறுகிய காலத்தில் அதிக மகசூல் தரக்கூடியதும் ஊடுபயிருக்கு உகந்த ரகமான வம்பன் 1,3 மற்றும் ஏ.கே.பி.1 ஆகியவற்றை பயிரிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ், பயறு வகை பயிர்களுக்கு தெளிப்புக்கான நீர் பாசன கருவி ரூ.7500 மான்ய விலையில் வழங்கப்படுகிறது. தேவைப்படும் விவசாயிகள் சேந்தமங்கலம் வேளாண்மை விரிவாக்க மையத்தை அணுகி பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.
இவ்வாறு வருதராஜூ தெரிவித்துள்ளார்.

### தர்மபுரி மாவட்டத்தில்ஆயிரம் ஏக்கரில் பயிரிடப்பட்ட பி.டி பருத்தி கருகியதாக புகார் நிவாரணம் கேட்டு ஆட்சியரிடம் விவசாயிகள் மனு

பதிவு செய்த நாள் 2/3/2010 2:46:50 AM

தர்மபுரி,: தர்மபுரி அருகே ஆயிரம் ஏக்கரில் பயிரிடப்பட்ட பி.டி பருத்தி கருகியதால் பலத்த நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும், எனவே உரிய நிவார ணம் வழங்க வேண்டும் என் றும் விவசாயிகள் கோரிக்கை வைத்துள்ளனர்.

தர்மபுரி ஆட்சியர் அலுவலகத்திற்கு நேற்று முன்தினம் கருகிய பருத்தி செடிகளுடன் 100க்கும் மேற்பட்ட விவசாயிகள் வந்தனர். இது குறித்து அவர்கள் கூறியதாவது:
பி.டி பருத்தியை பயிரிடுவதால் விவசாயிகளுக்கு நல்ல லாபம் கிடைக்கும் என்று அரசு கடந்த சில வருடங்களுக்கு முன் பரிந்துரை செய்தது. இதனை ஏற்று பயிரிட்ட எங்களுக்கு ஓரளவு லாபமும் கிடைத்தது. இதை கருத்தில் கொண்டு இந்த வருடமும் மொரப்பூர், தாசரள்ளி, இலவடை, பொம்மிடி, கோபிநாதம்பட்டி போன்ற 17 கிராமங்களில் 360 விவசாயிகள் சுமார் ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் பி.டி. பருத்தி பயிரிட்டுள்ளனர். ஆனால் இந்த முறை செடி வளர்ந்து, காய் முளைவிட்ட நிலையிலேயே கருகிவிட்டது. இதே போல் புழுவெட்டும் அதிகரித்துள்ளது. இதற்கு தனியார் நிறுவனங்கள் விற்கும் தரமற்ற மருந்துகளும், உரங்களும் ஒரு காரணம்.
எனவே, இது போன்ற நிறுவனங்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் நூற்றுக்கணக்கான ஏக்கரில் பி.டி பருத்தி பயிரிட்டு நஷ்டம் அடைந்த விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டும். இதை வலியுறுத்தி மாவட்ட ஆட்சியரிடம் மனு கொடுத்துள்ளோம். மேலும் முதல்வரிடமும் நிவாரணம் கேட்டு கோரிக்கை வைத்துள்ளோம். இவ்வாறு விவசாயிகள் தெரிவித்தனர்.

### நாற்று விடும், நடவு இயந்திரம் மானியத்தில் விநியோகம்

பதிவு செய்த நாள் 2/3/2010 2:32:54 AM

சேலம், தமிழகத்திலேயே முதல் முறையாக கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தானியங்கி நாற்றுவிடும் இயந்திரம் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது. ரூ.1 லட்சத்து 99 ஆயிரம் மதிப்புள்ள இந்த இயந்திரத்திற்கு ரூ.45 ஆயிரம் மானியம் அளிக்கப்படுகிறது. ஒரு மணி நேரத்தில் 600 முதல் 650 தட்டுகளின் நாற்று விடப்படுகிறது.

ஒரு மணி நேரத்தில் பத்து ஏக்கருக்கு (ஒரு ஆண் கூலி மட்டும் இருந் தால் போதுமானது). தேவையான நாற்றுகள் தட்டுகளில் விடப்படுகிறது. நடவு இயந்திரம் மூலம் ஒரு மணி நேரத்தில் ஒரு ஏக்கர் நடவு செய்யலாம். இடைவெளியில் வளரும் களைகளை அகற்றுவதற்கு களை எடுக்கும் இயந்திரம் ரூ.20,000 மானியத்தில் வழங்கப்படுகிறது.

இது குறித்து வேளாண்மை செயற்பொறியாளர் அருள்மொழி மற்றும் வேளாண்மை இணை இயக்குநர் ராஜன் ஆகியோர் கூறியதாவது:
நாற்று விடுதல், நடவு செய்தல், களை எடுத்தல் போன்ற பணிகளை இயந்திரம் மூலமாக மேற்கொள்வதன் மூலம் அதிக பரப்பளவில் நெல்நடவு செய்யலாம். நெல்சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு நடவு இயந்திரத்துக்கு ரூ.2,60,000 மானியமும் தானியங்கி நாற்று விடும் இயந்திரத்திற்கு ரூ.45,000 மானியமும் களை எடுக்கும் இயந்திரத்துக்கு ரூ.20,000 மானியமும் வழங்கப்படுகிறது. மேலும் விவரங்களுக்கு கிருஷ்ணகிரி உதவி செயற்பொறியாளர் நடராஜன், ஓசூர் செயற்பொறியாளர் தியாகராஜன் ஆகியோரை அணுகலாம். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

இயந்திரத்தின் மூலம் நடவு செய்யும் நிகழ்ச்சியின்போது, 200க்கும் மேற்பட்ட விவசாயிகள், வேளாண்மை அதிகாரி பச்சையப்பன், வேளாண் பொறியாளர் இஸ்மாயில், தோட்டக்கலை வல்லுநர் ரமேஷ்பாபு ஆகியோர் கலந்து கொண்டனர்.அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

### *சர்வதேச அளவில் உற்பத்தி குறைந்துள்ளதால்*
### *இயற்கை ரப்பர் விலை உயர வாய்ப்பு*

*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

*கொச்சி*
*சர்வதேச அளவில் ரப்பர் உற்பத்தியில் முன்னிலை வகித்து வரும் ஒரு சில நாடுகளில் உற்பத்தி சரிவடைந்துள்ளது. இதனால் இவ்வாண்டு இயற்கை ரப்பர் விலை உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தநிலையில், உலகின் பல்வேறு நாடுகளில் இயற்கை ரப்பருக்கான தேவைப்பாடு தொடர்ந்து அதிகரித்து வருகிறது என்பது குறிப்பிடத்தகது.*

*இயற்கை ரப்பர் உற்பத்தி செய்யும் நாடுகளின் கூட்டமைப்பு வெளியிட்டுள்ள புள்ளிவிவரத்தில், 2009–ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரையிலான 12 மாத காலத்தில், முக்கிய நாடுகளின் ரப்பர் உற்பத்தி 5.1 சதவீத அளவிற்கு சரிவடைந்துள்ளது. குறிப்பாக தாய்லாந்து, இந்தோனேஷியா, மலேசியா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளில் ரப்பர் உற்பத்தி குறைந்து போயுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது.*

*தாய்லாந்து*

*தாய்லாந்து நாட்டில் இயற்கை ரப்பர் உற்பத்தி சுமார் 6.1 சதவீத அளவிற்கும், இந்தோனேஷியாவில் 5.7 சதவீத அளவிற்கும், மலேசியாவில் 22.1 சதவீத அளவிற்கும், இந்தியாவில் 7.3 சதவீத அளவிற்கும் ரப்பர் உற்பத்தி குறைந்து போயுள்ளது. அதேசமயம் இந்நாடுகளில் இயற்கை ரப்பர் கையிருப்பும் இல்லை என்பது கவனிக்கத்தக்கது. இதனால் இயற்கை ரப்பரின் விலை மேலும் உயரும் என ரப்பர் வர்த்தகர்கள் தெரிவித்தனர்.*

*சீனா*

*அதேசமயம் சீனா, இலங்கை, வியட்நாம் மற்றும் கம்போடியா ஆகிய நாடுகளில் ரப்பர் உற்பத்தி அதிகரித்துள்ளது. மேற்கண்ட நாடுகளுள், வியட்நாமில் 9.7 சதவீதமும், சீனாவில் 17.9 சதவீதமும் ரப்பர் உற்பத்தி அதிகரித்துள்ளது. எனவே இந்த நாடுகள் இயற்கை ரப்பரை, உலக சந்தைகளுக்கு அதிக அளவில் அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

### *சென்ற டிசம்பர் மாதத்தில்*
### *நாட்டின் இறக்குமதி 27 சதவீதம் உயர்வு*

*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

*புதுடெல்லி*
*சென்ற 2009–ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில், நாட்டின் இறக்குமதி 27.2 சதவீதம் அதிகரித்துள்ளது.*

*பொருளாதாரம்*

*சென்ற 2008–ஆம் ஆண்டில் ஏற்பட்ட பொருளாதார மந்தநிலையால், நிறுவனங்கள் விரிவாக்க திட்டங்கள் மேற்கொள்வதை குறைத்துக் கொண்டன. இதனால், இந்திய நிறுவனங்களின் பொறியியல் சாதனங்கள் மற்றும் மூலப்பொருள்கள் இறக்குமதி சரிவடைந்து வந்தது. இதனையடுத்து, தொடர்ந்து 11 மாதங்களாக நாட்டின் இறக்குமதி குறைந்து வந்தது. இந்நிலையில், சென்ற 2009–ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் நாட்டின் இறக்குமதி, கடந்த 2008–ஆம் ஆண்டின் இதே மாதத்தைக் காட்டிலும் 27.2 சதவீதம் அதிகரித்து 1,945 கோடி டாலரிலிருந்து (ரூ.89,470 கோடி) 2,475 கோடி டாலராக (ரூ.1,13,850 கோடி) உயர்ந்துள்ளது.*

*ஏற்றுமதி*

*சென்ற 2008–ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்திலிருந்து நாட்டின் ஏற்றுமதி தொடர்ந்து 13 மாதங்களாக சரிவடைந்து வந்தது. இந்நிலையில், சென்ற நவம்பர் மாதத்திலிருந்து ஏற்றுமதியில் முன்னேற்றம் ஏற்படத் தொடங்கி உள்ளது. அம்மாதத்தில் ஏற்றுமதி 18.2 சதவீதம் உயர்ந்து 1,319 கோடி டாலராக (ரூ.60,674 கோடி) அதிகரித்துள்ளது. இது, சென்ற டிசம்பர் மாதத்தில் 9.3 சதவீதம் உயர்ந்து 1,336 கோடி டாலரிலிருந்து*

*(ரூ.61,456 கோடி), 1,460 கோடி டாலராக (ரூ.67,160 கோடி) அதிகரித்துள்ளது.*

வர்த்தக பற்றாக்குறை

*இறக்குமதிக்கும், ஏற்றுமதிக்கும் இடையில் உள்ள வித்தியாசம் வர்த்தக பற்றாக்குறையாகும். சென்ற டிசம்பர் மாதத்தில், நாட்டின் வர்த்தக பற்றாக்குறை (2,475 கோடி டாலர் – 1,460 கோடி டாலர்) 1,015 கோடி டாலராக (ரூ.46,690 கோடி) உயர்ந்துள்ளது. சென்ற 2008–ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்துடன் ஒப்பிடும்போது (600 கோடி டாலர்) 69 சதவீதம் அதிகமாகும்.*

இறக்குமதி

*சென்ற நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் ஏற்றுமதி அதிகரித்துள்ள போதிலும், அதற்கு முந்தைய மாதங்களில் இது தொடர்ந்து சரிவடைந்து வந்தது. இதனையடுத்து, நடப்பு நிதி ஆண்டின் முதல் 9 மாதங்களில் ஏற்றுமதி 20.3 சதவீதம் குறைந்து 11,758 கோடி டாலராக (ரூ.5,40,868 கோடி) குறைந்துள்ளது. இதே காலத்தில், இறக்குமதி 23.6 சதவீதம் குறைந்து 25,380 கோடி டாலரிலிருந்து 19,382 கோடி டாலராக (ரூ.8,91,572 கோடி) சரிவடைந்துள்ளது.*